இதழ் 323
25 ஜனவரி 2025
15 பக்கங்கள்

இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1




## சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 80வது ஆண்டில் ஈழத்தமிழர் இறைமையின் தொன்மை குறித்து சில தெளிவுகள்

மூத்த அரசியல் ஆய்வாளர் சூ. யோகராசா





© 2025 இலக்கு இணையம்

## படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி வேண்டும்!

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி பெற்றுத்தருமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகர்தராஜனின் 19 ஆவது ஆண்டு நினைவு தினம் (24.01.2025) திருகோணமலையில் எஸ்.சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட இடமான ஓசில் பார்க்கில் நடைபெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு கிழக்கு



தெற்கு ஊடகவியலாளர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அருள் ராஜாவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் ''இலங்கையின் ஊடகத்துறை வரலாறு பல்வேறு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஏமனின் குதீஸ் அமைப்பினை பயங்கரவாதிகளாக அறிவிக்க அமெரிக்கா திட்டம்?



ஏமனில் உள்ள குதீஸ் அமைப்பினரை பயங்கரவாதிகளாக அறிவிக்கும் நடைமுறைகளை அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம் ஆய்வுசெய்து வருவதாக அமெரிக்காவின் வெளிவிவகார செயலக வட்டாரங்கள் கடந்த புதன் கிழமை(22) தெரிவித்துள்ளன.

ஏமனின் பெரும் பகுதிகளை குதீஸ் அமைப்பினர் கடந்த 2019 ஆம் ஆண்டில் இருந்து தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளனர். ட்ரம்பின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இந்த அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிவிப்பு ஏமனின் குதீஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான உதவிப் பணிகளைப் பாதிக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஜோ பைடன் அரசு அதனை 2021 ஆம் ஆண்டு நீக்கியிருந்தது.

குதீஸ் அமைப்பினரை பயங்கரவாதிகளாக அறிவிப்பதற் கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுஅமைக்க தீர்மானம் – ரவிகரன் எம்.பி தகவல்

வடபகுதி கடற்றொழிலாளர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அப்பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு குழுவொன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் (24.01.2025) வடமாகாண எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பதினொரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடமாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகளுக்கும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாகவும் இக் கலந்துரையாடலிலேயே இவ்வாறு குழு ஒன்றை அமைப்பதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'மேலும் இக்கலந்துரையாடலில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் மற்றும், உள்ளூர் மீனவர்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பேசப்பட்டது. அத்தோடு அத்துமீறி எல்லைதாண்டிவரும் இந்திய இழு வைப்படகுகளின் இழுவை மடித் தொழில்களால் வடபகுதியைச் சேர்ந்த சிறுதொழிலாளர்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இஸ்ரேலிய படையினரை பலப்படுத்தும் கூகுள் நிறுவனம்

புதிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்டபத்தை இஸ்ரேலிய படையினருக்கு வழங்குவதற்கு கூகுள் நிறுவனம் மிகவும் தீவிரமாக செயற்பட்டு வருவதாக த வொசிங்டன் போஸ்ட் நாளேடு இந்த வாரம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய பின்னர் செயற்கை தொழில்நுட்ப நுண்ணறிவு மூலம் புலயான்வுத் தகவல்கள் மற்றும் இருப்பிடங்களை கண்டறியும் தொழில் நுட்பத்தை இஸ்ரேலிய படையினருக்கு வழங்கு




வதற்கு கூகுள் நிறுவனம் ஆர்வமாக உள்ளது. ஆனால் அதனை இஸ்ரேலிய படையினர் அப்பாவி மக்களை கூட்டமாக படுகொலை செய்வதற்கு பயன்படுத்தலாம்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## 2024ஆம் ஆண்டு காலநிலை மாற்றத்தால் 5 லட்சத்துக்கும் அதிக மாணவர்கள் பாதிப்பு

'2024ஆம் ஆண்டில் காலநிலை மாற்றம் காரணமாக 5 இலட்சத்து 15 ஆயிரத்து 306 இலங்கை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

'வெள்ள அனர்த்தம் காரணமாகவே அதிகளவான மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்' என்றும் அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச கல்வி தினமான இன்று (24) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'காலநிலை மாற்றத்தினால் சிறுவர்களின் கற்றல் மற்றும் எதிர்காலம் ஆபத்தில் இருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள் ளது.

'கடந்த ஆண்டு காலநிலை மாற்றம் காரணமாக உலகளாவிய ரீதியில் ஏழு மாணவர்களில் ஒருவரின் பாடசாலைக்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்க செல்வந்தர்களுக்கு எதிராக போராட வேண்டிய நேரம் – ஸ்பெய்ன்



ஏனைய நாடுகளின் அரசியல் விவகாரங்களில் தலையிடும் அமெரிக்காவின்செல்வந்தர்களுக்கு எதிராக நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். Silicon Valley எனப்படும் இந்த தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்கள் ஏனைய நாடுகளின் ஜனநாயகத்தில் அதிக தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என ஸ்பெயினின் பிரதமர் பெற்ரோ சன்சே தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை(20) அமெரிக்காவில் இடம்பெற்ற டொனால் ட்ரம்பின் பதவியேற்பு விழாவில் ரெஸ்லா மற்றும் ருவிட்டர் நிறுவனங்களின் தலைவர் எலோன் மஸ்க், முகநூல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இலங்கை அரசாங்கம் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை இரத்துச்செய்யவில்லை

### அதானி குழுமம்

மன்னார் பூநகரியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின்திட்டத்தினை இலங்கை அரசாங்கம் நிறுத்தவில்லை என அதானிகுழூமம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள அதானி குழூமம், காற்றாலை மின் உற்பத்தி திட்டம் இரத்துசெய்யப் படவில்லை என உறுதியாக தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.



இலங்கையின் பசுமை வலு சக்திதுறையில் ஒரு பில்லியன் டொலரை முதலீடு செய்வது குறித்து அதானி உறுதியாக உள்ளார் என அதானி குழூமம் தெரிவித்துள்ளது.

## செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் புற்றுநோய்க்கான மருந்து

செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியில் புற்றுநோய்க்கான RNA தடுப்பு மருந்தை தயாரிக்கும் பணிகளை தமது நிறுவனம் முன்னெடுக்கவுள்ளதாக Oracle என்ற நிறுவனத்தின் பணிப்பாளர் லாறி எலிசன் இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தை இயந்திரங்களின் உதவியுடன் 48 மணிநேரத்தில் தயாரிக்க முடியும். ஒவ்வொரு மனிதர்களினதும் டி.என்.ஏ மூலக்கூறுகளை ஆய்வு செய்வதன் மூலம் அவர்களின் புற்றுநோய்க்



கான சாத்தியங்களை கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு தனிப்பட்ட தடுப்பு மருந்துகளை தயாரிக்க முடியும். புற்றுநோய்க்கு மட்டுமல்லாது. இருதய நோய்களுக்கான தடுப்பு மருந்தையும் உருவாக்க

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அரசியல் கட்சிகளும், தமிழ்தேசிய கட்சிகளும்..!

*இலங்கையில் ஏற்கனவே மொத்தமாக 83, அரசியல் கட்சிகள் இலங்கை தேர்தல் ஆணையகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 76, மட்டுமே இலங்கையில் உள்ளது . 7, கட்சிகள் இயங்கு நிலையில் இல்லை..*

*இந்த 76, கட்சிகளிலும் தமிழ்த்தேசிய கொள்கையை முன்னிறுத்தி அரசியல் செய்யும் கட்சிகளாக..*

1. *இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி.*
2. *அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்.*
3. *தமிழர் விடுதலை கூட்டணி.*
4. *தமிழீழ விடுதலை இயக்கம்.*
5. *ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி.*
6. *ஈழவர் ஜன நாயக முன்னணி.*
7. *தமிழ் மக்கள் தேசிய கூட்டணி.*
8. *ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி.*

*இந்த எட்டு பதிவு செய்யப்பட்ட கட்சிகள் மற்றும் பதிவு செய்யாத ஓரிரு கட்சிகள் மட்டுமே தமிழ்த்தேசிய கொள்கை அடிப்படையில் இணைந்த வடகிழக்கில் இணைப்பாட்சியை(சமஷ்டி) வலியுறுத்தி அகிம்சை ரீதியாக போராடும் கட்சிகளாக அல்லது அந்த கொள்கையை முன்னிறுத்தி தேர்தல் அரசியல் செய்யும் கட்சிகளாக உள்ளன.*

*ஏனைய 68, கட்சிகளும் தமிழ்தேசிய கொள் கையோ, சமஷ்டி தீர்வையோ விரும்பாத அபிவிருத்தி, சலுகை, பதவிகளை முன்னிறுத்தி தமது கொள்கைகளை கொண்ட கட்சிகளாகும்.*

*இந்த வித்தியாசத்தை சரியாக உணர்ந்தால் மட்டுமே தமிழ்தேசிய கொள்கையுள்ள கட்சிகளை இனம்காணலாம். தமிழ்த்தேசியவாதிகளாக செயல் படலாம்.*

***தமிழ்த்தேசியம் என்றால் என்ன?***

*தமிழ் இனம், தமிழ்மொழி(தாய்மொழி) தமிழர் நிலம், (தமிழ்த்தேசம்)இறையாண்மையுள்ள தமிழ்த்தேசம், தமிழர்களின் பண்பாடு.தமிழர் மாண்பு இவைகளுடன் எமது இலக்கு என்னும் கருதுகோளே தமிழ்த்தேசியம் ஆகும்.*

*தமிழ்த்தேசியம் என்பது அரசியலுக்கான சொல் இல்லை, அது தமிழ் இனத்துக்கான வாழ் வியலை குறிக்கும், இனத்துக்கான வாழ்வியலை உறுதிப்படுத்தவே தமிழ்த்தேசிய அரசியல் முக்கியத்து வம் பெறுகிறது.*

*இது 75, வருடமாக அகிம்சை, ஆயுதம், இராஜ தந்திரம் என நீண்ட வரலாறுகளை கொண்டு அரசியல் செயல்பாடுகள் முன்னகர்த்தப்படுகிறது.*

*இந்தவரலாற்றில் வீரம், தியாகம், துரோகம், எதிரி, விரோதி,சோதனை, வேதனை, ஏமாற்றம், வெற்றி, தோல்வி என பல படிகளை கடந்து பயணிக்கிறது.*

*தமிழ்தேசிய அரசியல் கட்சிகளில் தலைவர் களாகவும் உறுப்பினர்களாகவும், செயல்பாட்டாளர் களாகவும், அங்கத்தவர்களாகவும் உள்ள அனைவருமே வடகிழக்கில் பிறந்து அந்த மண்ணோடு உணர்வோடு, கலை பண்பாடு, மொழியுடன் வாழ்ந்தவர்களுக்கே மண் விடுதலைக்கான உணர்வு இயல்பாக வரும்.*

*அப்படி இல்லாதவர்கள் யாராக இருந்தாலும் தமிழ்த்தேசிய அரசியலை ஏனைய 68, கட்சிகளில் ஒன்றாகவே கருதுவார்கள். ஒருவருடைய பிறப்பும், வாழும் சூழலுமே அந்த மனிதரின் குணநலனை தீர்மானிக்கும்.*

*இந்த உண்மையை விளங்கவேண்டியது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளில் உள்ள அனைவரினதும் கடமையாகும்.*

*உண்மைகளை மறைத்து உரிமை அரசியலை உணர்வுடன் முன்எடுக்க முடியாது என்ற கசப்பான உண்மையை புரிவது நல்லது..!*

## அட்லீ கால தொழிற்கட்சி ஆட்சியில் இறைமையிழப்புக்குள்ளாகிய ஈழத்தமிழர் ஸ்ராமர் கால தொழிற்கட்சி ஆட்சியில் இறைமை மீட்புக்கு உள்ளாகட்டும்

கனடாவின் உலகளாவிய விவகாரங்களின் பிரிவின் தெற்காசியத் தொடர்புகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் மேரி லூயிஸ் ஹனன் கொழும்பில் வைத்து அமெரிக்க அரசத்தலைவர் ட்ரம்பின் ஐக்கிய நாடுகளின் அமைப்பான உலக சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் பாரிஸ் காலநிலைச் சீர்குலைவுக்கான அமைப்பு என்பவற்றில் இருந்து விலகுவது ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைத்தீவில் நடாத்தப்பெற்ற யுத்தக்குற்றங்கள், மனிதாயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் வன்முறைகள் தொடர்பாகச் சாட்சியங்களைத் தரவுகளைச் சேர்க்க இலங்கைக்கான மனித உரிமைகள் கண்காணிப்பு நாடுகளின் நெறிப்படுத்தலில் செயற்பட்டு வரும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் செயற்பாடுகள் நிச்சயமற்றதன்மையை எதிர்நோக்குகிறது என்ற எச்சரிப்பை வெளியிட்டார்.

இந்நிலையில் இந்த இலங்கைக்கான மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் முக்கிய நாடான பிரித்தானியாவை தங்கள் பக்கம் இழுக்கும் சிறிலங்காவின் முயற்சிகள் வேகம் பெற்று வருகின்றன. சிறிலங்காவின் 10வது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா ஐக்கிய இராச்சிய நட்புறவுச் சங்கத்தை மீளுருவாக்குவதற்காகச் சபாநாயகர் ஜகத்விக்கிரமரத்ன தலைமையில் கூடி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹரின் நாணயக்காரவைத் தலைவராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கத்தைச் செயலாளராகவும் தெரிவு செய்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்றிய இக்கூட்டத்திற்கு விசேட விருந்தினராக இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் கலந்து கொண்டார். சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையிலான உறவு வலுவடைந்து வந்துள்ளதை இந்த நட்புறவுச் சங்க மீளுருவாக்கம் உறுதிப்படுத்தியுள்ளது. சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடியின் பொழுது ஐக்கிய இராச்சியம் வழங்கிய ஆதரவு மற்றும் பரிஸ் கழக உறுப்பினராக கடன் மறுசீரமைப்புக்கு அளித்த பங்களிப்புகளுக்கு நன்றி கூறினார். இங்கு உரையாற்றிய பிரித்தானியாவின் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் "50000 இலங்கை மாணவர்கள் பிரித்தானியாவில் படிக்கின்றார்கள். கல்வித் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை தொடர்ந்தும் வளர்ப்பதை ஐக்கிய இராச்சியம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அடுத்த 30 ஆண்டுகளில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக் கணிப்புக்களின்படி இந்தப் பிராந்தியம் அதிகளவான செல்வாக்குமிக்கதாக மாறும். பிரகாசமான எதிர்காலத்துக்கு இலங்கை ஒரு நல்ல நிலையில் இருக்கிறது" என எடுத்துரைத்துள்ளார்.

இந்நிலையில் 04.02. 2025இல் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 1796 கி. பி முதல் 1948 கி.பி வரை 152 ஆண்டுகள் தாங்கள் கைப்பற்றி வைத்திருந்த ஈழத்தமிழர்களின் இறைமையை ஈழத்தமிழர்களின் விருப்பின்றி சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையில் சிங்களவர்களின் இறைமையுடன் இணைத்துச் சுதந்திரம் வழங்கிய 77வது ஆண்டு வருகிறது. பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தின் ஈழத்தமிழர்கள் குறித்த பொறுப்பற்ற இந்தச் செயலாலேயே கடந்த 77 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்களால் இனஅழிப்பு இனத்துடைப்புப் பண்பாட்டு இனஅழிப்பு அரசியலுக்கு ஆளாகி வருகின்றனர். இதனால் இலங்கைக்குப் பிரித்தானியா சுதந்திரம் கொடுத்த நாளை கடந்த 77 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் துக்க தினமாகக் கருதி அன்றைய தினத்தில் தங்களுடைய இறைமையுடன் கூடிய தாயக தேசிய தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளைக் கொண்ட தன்னாட்சி வாழ்வை வாழ அனுமதிக்கும் படி தங்களுடைய வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக நாடுகளிடம் கோரி வருவது வழமை. அந்த வகையில் இவ்வாண்டும் பிரித்தானியாவில் இலண்டனில் பெப்ரவரி 4ம் நாள் சிறிலங்காத் தூதுவராலயத்தின் முன்பிருந்து காலை 11 மணிக்குப் புறப்பட்டு பிரித்தானியப் பிரதமரிடம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னாட்சிக்கான உரிமைக் குரல் எழுப்பி ஈழத்தமிழர்கள் தேசமாகவே பேரணியாகச் செல்வதற்குப் பிரித்தானியா வாழ் அனைத்து ஈழத்தமிழரையும் மற்றும் ஈழத்தமிழரின் மனித உரிமைகளுக்கும் அமைதிக்கும் உழைக்கும் அனைவரையும் ஈழத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணைந்து அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையும், தமிழீழத்தின் அனைத்துலக இராஜதந்திரக் கவுன்சிலும் அழைத்துள்ளது. "எமது உரிமைக்குரலை உரத்துக் கூறுவோம். இனமான உணர்வோடு ஒன்றாகுவோம்" என்னும் மையப்பொருளுடன் இந்த ஈழத்தமிழர் தன்னாட்சிக்கான உரிமைக் குரல் போராட்டம் நடைபெறவுள்ளது.

ஒருவகையில் எந்த பிரித்தானியத் தொழிற்கட்சியின் பிரதமர் கிளமென்ட் அட்லியின் ஆட்சிக்காலமான 1945 முதல் 1948 க்கு இடையில் அக்கால ஈழத்தமிழர்களின் அரசியல் தலைவரும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவரும் சட்டமாமேதையுமான ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கையின் இலங்கைத் தமிழர்களின் தேசிய நீக்க இறைமை நீக்க பகுதிகளுக்கு எதிரான கண்டனங்களையும் சீர்திருத்த விதந்துரைப்புக்களையும் செய்த பொழுது அதனைக் கவனத்தில் எடுக்காது அதனையே அடிப்படையாகக் கொண்ட வெள்ளை அறிக்கையை பிரதமர் அட்லி அவர்களின் பாராளுமன்றம் சிலோனுக்கான அரசியலமைப்பாகவே பிரகடனப்படுத்தி 77 ஆண்டுகளாக ஈழத்தமிழரின மேலான சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி அரசாங்கங்களின் பாராளமன்றக் கொடுங்கோன்மை மூலம் ஈழத்தமிழர்களை இனஅழிப்புக்களுக்கும் இனத்துடைப்புக்களுக்கும் பண்பாட்டு இனஅழிப்புக்கும் உள்ளாக வைத்து வருகிறதோ, அந்த நிலையை இன்றைய பிரித்தானியத் தொழிற்கட்சியின் பிரதமர் சேர். கெயர் ஸ்ராமர் கவனத்தில் எடுத்து ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை அவர்கள் தங்களின் இறைமையின் அடிப்படையில் தங்களின் தாயகத்தில் தங்களின் தேசியத்தைப் பேணி தங்களுக்கான தன்னாட்சி வாழ்வில் பெற உதவி ஈழத்தமிழர்களுக்கும் தொழிற்கட்சியின் நற்பெயருக்கும் ஒரே நேரத்தில் உதவ இந்த ஈழத்தமிழர் தன்னாட்சிக்கான உரிமைக் குரல் பேரெழுச்சிப் பேரணி வழிகாட்ட ஈழத்தமிழர்கள் அனைவரும் ஒன்று இணைந்து செயற்பட வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. இதன் வழி ஈழத்தமிழரின் தாயகத்தின் இந்துமாக்கடலின் பாதுகாப்பும் உறுதி பெற்று உலகின் பாதுகாப்பும் அமைதியும் சிறக்கும் என்பதையும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

**ஆசிரியர்**

# இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை அல்லது வர்க்கப் பிரச்சினை தீர்ந்தாலே, இனப் பிரச்சினையும் தீர்ந்துவிடுமா?

## பகுதி 1 இன் தொடர்ச்சி

மேலும், ஒரு தத்துவார்த்தக் கூற்றைச் சிறிது விரிவாகப் பார்க்கலாம். “காணப்படும் நிஜமான வாழ்க்கை நிலைமைகளில் இருந்து தத்துவப் பிரச்சினைகள் எழுகின்றன. அந்த நிஜமான எதார்த்தபூர்வ நிலைமைகளை மாற்றுவதன் மூலமே - உலகை மறு உருவாக்கம் செய்வதன் மூலமாக மட்டுமே அப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.”

*(“... philosophical problems arise out of real-life conditions, and they can be solved only by changing those conditions-by remaking the world.”).*



அதாவது, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது எதார்த்தபூர்வ வாழ்க்கை நிலையில், அதாவது அது நிஜமாக எவ்வாறு காணப்படுகிறதோ அதை அதன் வடிவில் தீர்க்காமல் வேறு வழியில், அதாவது பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் அல்லது வர்க்கப் பிரச்சினை தீர்ந்தால் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று ஞானப்பால் குடிக்க முடியாது.



கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது தனிப்பட்ட மனித மனதில் இருந்தோ அல்லது வெறும் கொலைவெறி மனப்பாங்கில் இருந்தோ உருவாகுவதில்லை. அது காணப்படும் புவியியல் - வரலாற்றுப் பின்னணியில் இருந்து உருவாகிறது.

கி.மு ஆயிரமாம் ஆண்டுக்கு முன்பிருந்தே எகிப்தியர், பாரசிகர், பரந்த அரேபியர், ரோமானியர், பரந்த ஐரோப்பியர் என ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பியக் கண்டங்களைச் சேர்ந்த பல இனங்களாலும் யூதர்கள் அழிவுக்கும் துன்பத்திற்கும் உள்ளாகினர். இதற்கு இவர்களது புவிசார் அமைவிட அரசியற் பின்னணி பிரதான காரணமாகும். இத்தகைய புவிசார் அமைவிட வரலாற்றுப் பின்னணியில் (Geohistorical background) இருந்து இறைவனால் “வாக்களிக்கப்பட்ட பூமி - The Promised Land” என்ற மத ரீதியான ஐதீகம் (Myth) கி.மு 1000 ஆம் ஆண்டளவில் வடிவம் பெறத் தொடங்கியது. எந்தொரு ஐதீகத்துக்குப் பின்னாலும் அதற்கு அடிப்படையான ஒரு நிஜமான வாழ்வியற் பின்னணி அல்லது வரலாற்றுப் பின்னணி இருக்கவே செய்யும்.

யூதர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது மேற்படி மூன்று கண்டங்களையும் சேர்ந்த பல்வேறு இனங்களினாலும் காலத்துக்குக் காலம் அவரவர் பங்களிப்புக்கு உட்பட்டுச் சுமாராக மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றுப் போக்கில் திரட்சி பெற்ற ஒன்றாகவும் காணப்படுகிறது.



மு.திருநாவுக்கரசு

இனப்படுகொலை என்றாலே அது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைதான். அதனை அவ்வப்போது எழுமாத்திரமாக நிகழும் ஒன்றாய் வெறும் உதிரி அர்த்தத்தில் பொருள் கொள்ளக்கூடாது. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னான ஆதி மனித இனக்குழுக்களின் மத்தியில் ஓரினத்தை இன்னொரு இனம் அழித்துள்ள வரலாறுண்டு. உயிரை உயிர் உண்டு வாழ்வதே உயிர் வாழ்வு என்ற நியதிக்கு அமைய இனங்களும் அப்போதைய தத்தம் தேவைகளுக்கேற்ப ஓரினத்தை இன்னொரு இனம் கொன்று உயிர் வாழும் வரலாற்றுப் போக்கு இலட்சம் ஆண்டுகால மனிதகுல வரலாற்றில் உண்டு.

இனக் கலவரம் (Ethnic Riots), ஓரினத்தின் மீதான திட்டமிடப்பட்ட பாரிய படுகொலை (Pogrom), இன, மத, அரச அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டத்துக்கு எதிராகப் பரந்த அளவிலான படுகொலைகள் உட்பட தீவைத்தல் முதற்கொண்டு நாசகார வேலைகளைச் செய்தல் (Holocaust) என இனப்படுகொலை பற்றிப் பல உதிரியான பதங்கள் பயன்படுத்தப்பட்டாலும் இவை அனைத்துமே கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குள் அடங்குவனவாகும்.



முதன் முறையாக 1944 ஆம் ஆண்டு போலந்து யூத இனத்தவரான ரபாயேல் லிம்கின் (Raphael Lemkin) என்பவர் “Genocide” என்ற பதத்தை வடிவமைத்தார். 1946 ஆம் ஆண்டு போலந்தில் நடந்த யூத இனப்படுகொலை விசாரணையின் போது “Genocide” வார்த்தை ஒரு சட்டப் பதமாகப் பயன்பாடடைந்தது. இதன் பின்பு 1948 ஆம் ஆண்டு ஐ.நா “Genocide Convention” உடன் சர்வதேச அளவில் “Genocide” என்ற பதம் இணைத்துக்கொள்ளப்பட்டது.

“Capitalism: A Structural Genocide” என்ற தலைப்பில் Garry Leech என்பவரால் எழுதி 2012 ஆம் ஆண்டு வெளியான நூலில், தற்போதைய உலகில் அரசுகள் மூலமாக நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கு உலகளாவிய முதலாளித்துவம் அடிப்படைக் காரணம் என்று ஒரு தத்துவப் பின்னணியைக் கூற முற்படுகிறார்.



நவீன தொழில்சார் பண்ட உற்பத்தி, முதலாளித்துவம் போன்றவை தோன்றும் முன்பேயும் இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயேயும் இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. முதலாளித்துவத்தின் (Capitalism) மூலம் தனியார் முதலீடு (Private investment), தனியார் முதலீட்டின் மூலம் தனியுடைமை (Private ownership), தனி உடைமையின் மூலம் சொத்துடைமை (Property ownership) என்று இதன் தத்துவப் பின்னணி பின்னோக்கிய மூலத்திற்குச் செல்லும்.

இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஓர் இனக்குழு தனது உயிர் வாழ்வுக்காக வளமான நிலத்தையும், நீர் நிலைகளையும், வளமான காட்டையும் கட்டுப்படுத்துவதற்காக இன்னொரு இனக்குழுவுடன் மோதி அதில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வதில் இருந்து சொத்துடைமையின் மூலக்கூறை அடையாளம் காணலாம். இன்று காட்டுப் பிராணிகளின் வாழ்வியலில் பிராணிகளிடையேயான இருப்பிடத்திற்கு உரிமை கோருவதான மோதல்களில், இதற்கான தெளிவான மூலத்தைக் காணலாம். அதனை வனவியல் விஞ்ஞானத்தில் வாய்ப்பான பகுதி (Comfort zone) என்றழைப்பர்.



தனியார் முதலீட்டை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய முதலாளித்துவ அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புத்தான் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான மூல காரணம் என்பது அறிவியல் சார்ந்த, தற்கால அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு கோட்பாட்டு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொடர்ந்தும் தமிழர் வரலாறுகள் மறைக்கப்படுமா?

**கடந்த காலம், தற்பொழுது மற்றும் அரசு தற்போது கொண்டு வரவுள்ள கல்வித் திட்டத்திற்கும் என்ன வித்தியாசம்? இதனால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமா?**

ஒரு ஆசிரியராக, அதிபராக, உதவி கல்வி பணிப்பாளராக, கல்வி அமைச்சிலே கடமையாற்றி இருக்கின்றேன். அதன் பின்னர் கல்வி மேம்பாடு சம்பந்தமாக அதாவது முகாமைத்துவம் சம்பந்த மாக உலக வங்கியிலே நிபுணத்துவராகவும் கட மையாற்றி இருக்கிறேன். அந்த வகையில் எனக்கு ஒரு நீண்ட அனுபவம் இருக்கின்றது. இது தொடர்பாக சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்க கல்வி அமைச்சராக இருந்த பொழுது நான் ஒரு அறிக்கை அனுப்பி இருந்தேன். இந்த பாடத்திட்டங்களில் உள்ள குறைபாடு, தமிழர் வரலாறுகள் இருட்டடிப்பு செய்யப்படுகிறது என்று. இலங்கை வானொலியிலே அது சம்பந்தமான பேட்டி ஒன்றையும் கொடுத்திருந்தேன். நான் இலங்கை வானொலியில் பேட்டி கொடுத்த பொழுது அநேகமான முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் கல்விமான்கள் என்னோடு தொடர்பு கொண்டு நீங்கள் நல்ல விஷயங்களை கூறி இருக்கின்றீர்கள். இது உண்மையில் நடைமுறையில் பேசப்பட வேண்டிய விடயம் என்றார்கள்.

அதேபோல பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரும் என்னுடன் உரையாடினார். ஆனால் அதற்குப் பிறகு எந்த ஒரு அரசியல்வாதியும் இது சம்பந்தமாக பேசவில்லை. நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், இந்த பாடத்திட்டம் பிரித்தானியர் ஆட்சி காலத்திலே இருந்து இன்று வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் சின்ன சின்ன மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது சிங்கள ஏகாதிபத்தியம் தனது கொள்கைகள், தனது ஆள்புல எல்லையை நிர்ணயிப்பதற்கான ஒரு மாற்று வழியாக இந்த பாடத்திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றதே ஒழிய ஒரு சமத்துவமான எல்லா இன மக்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு கல்வி முறையை ஏற்படுத்தவில்லை. அந்த வகையில் காலத்துக்கு காலம் பல கல்வி திட்டங்கள் உருவாக்கப்பட்டது. 72 ஆம் ஆண்டு 77ஆம் ஆண்டு 83 ஆம் ஆண்டு இப்படியே வந்து கொண்டு இருந்தது. புதுசு புதுசாக ஒவ்வொரு அரசாங்கங்களும் வரும் பொழுது கல்வி திட்டங்களை மாற்றுவார்கள். நீங்கள் கூறியது போல் நாங்கள் படித்த காலங்களில் தனியார் அச்சிட்டப் பாடப் புத்தகங்களில் தான் படித்தோம். இப்பொழுது கல்வி வெளியீட்டு திணைக்களம் தான் புத்தகங்களை அச்சிடுகின்றது. தனியார் புத்தகங்களை அச்சிடும் பொழுது இலங்கைத் தமிழ் அரசியல், தமிழர் வரலாறு, ராஜ்ஜியங்கள் என அனைத்தும் உள்ளடக்கப்பட்டது.

இலங்கையில பிரித்தானியர் வருகைக்கு முன்னர் மூன்று அரசுகள் இருந்தது. அதில் தமிழ் அரசு என்ற யாழ்ப்பாண ராஜ்ஜியம் இருந்தது. அது நான் படித்த காலத்தில் இரண்டாம் வகுப்பிலே சின்ன ஒரு வரலாறாக இருந்தது. சங்கிலியன் மன்னன், பண்டார வன்னியன் ஆகியோரின் வரலாறுகளும் இருந்தது.

எனவே தமிழர்களாகிய எங்களுக்கு அதைப்பற்றிய அறிவு இருந்தது. நாங்களும் ஆண்ட இனம் என்று. ஆனால் அது காலப்போக்கில் வந்த அமைச்சர்கள், அதாவது முகமது என்ற முஸ்லிம் அமைச்சர் கல்வி அமைச்சராக நியமிக்கப்



**அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் முன்வைத்த கருத் துக்களை இலக்கின் வாசகர்களுக் காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan) செய்யவும்.**

பட்டமை, அதற்கு பின்னர் சிங்கள கல்வி அமைச்சர்கள் என நியமிக்கப்பட, வரலாறுகளும் மாற்றப்பட்டுக்கொண்டு வந்துள்ளது.

முதல் முதல் பாக்கு நீரிணை நீந்தி நீச்சல் கடந்த நவரட்ண சுவாமியினுடைய படத்தோடு அவருடைய வரலாறு மூன்றாம் நான்காம் வகுப்பு தமிழ் பாட புத்தகத்தில் இருந்தது. இப்படியான வரலாறுகள் சாதனைகள் அனைத்தும் புத்தகங்களில் அச்சிட்டுக்கொண்டு வரும் போது எங்களுக்கு ஒரு பரந்த அறிவு கிடைத்தது. இவ்வாறு வரலாறுகள் கிடைத்ததனாலேயேதான் நாட்டை நேசிக்கிற தன்மையும் வந்தது. ஆனால் பிறகு வந்த அரசாங்கங்கள் தமிழர் வரலாறுகளை இருட்டடிப்பு செய்தது.

இலங்கையில தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள். தமிழ் நூல்கள் வெளிவந்தன. தமிழ் வைத்தியர்கள் இருந்தார்கள். இந்த வரலாறு இன்றைக்கு படிக்கின்ற மாணவர்களுக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் படித்திருக்கிறோம். போர்த்துகேயருக்கு எதிராக, ஒல்லாந்தருக்கு எதிராக தமிழ் மன்னர்கள் எவ்வாறு போரிட்டார்கள். சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராக சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ் மக்களும் போராடினார்கள்.

ஆனால் சுதந்திரம் கிடைத்த பின், சிங்கள அரசியல் தலைவர்கள், தமிழ் அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கியது போல், அவர்களின் வாயை மூடச்செய்து விட்டார்கள். அதுக்கு பிறகு வந்த அரசியல் அமைப்புகளில் தமிழ் மறுக்கப்பட்டு, பௌத்த சிங்கள அரசாகத்தான் பிரகடனப்படுத்தினார்கள்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் வாழ்கின்ற ஒரு பூமியில் சிங்கள பௌத்த அரசிய லமைப்பை 72 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டார காலத்தில் கொண்டு வந்தது. அப்பொழுது கெல் வின் ஆர்டி செல்வா, சமத்துவம் பேசிக் கொண்டிருந்தவர். அவர்தான் அரசியல் அமைப்புக்கான அமைச்சராக கூட இருந்தவர். அதன் பிறகு வந்து பாடத்திட்டங்கள் அனைத்தும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்போது பிரதமர் ஹரினி அவர்கள் பாடத்திட்டத்தை மாற்றப்போவதாக குறிப்பிட்டிருந்தாலும் கூட அவர் எப்படி மாற்றப்போகிறார். ஏற்கனவே இருக்கின்ற பாடத்திட்டத்தினால் மாற்றங்களை கொண்டுவரப்போகிறாரா அல்லது முற்றாகவே 21 ஆம் நூற்றாண்டுக்கான அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குரிய ஒரு கல்வித் திட்டத்தை கொண்டுவரப்போகிறாரா? என்று இதுவரை எதுவுமே சொல்லப்படவில்லை. பாடத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதாக இருந்தால் பொது மக்களிடம் இருந்து அபிப்பிராயங்கள் கேட்கப்பட வேண்டும்.

**தமிழர்களுடைய பாடத்திட்டங்களிலே இருந்த வரலாறுகள் எல்லாம் மெல்ல மெல்ல அகற்றப்பட்டிருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ன செய்கின்றார்கள்?**

எனக்கு ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இந்த பாராளுமன்றத்துக்கு போகின்ற உறுப்பினர்கள், வாய்க்கால் தண்ணி வரவில்லை. அந்த மதகு உடைந்துள்ளது என்பதை எடுத்து கூற தமிழ் மக்கள் அவர்களை பாராளுமன்றம் அனுப்பி வைக்கவில்லை.

எங்களுடைய மண் மற்றும் கல்வியில் மொழி உரிமை பறிக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் பேசுவ தில்லை. இந்த புதிய பாடத்திட்டத்தை உரு வாக்கும் பொழுது தமிழ் முஸ்லிம் மக்களை உள்ளடக்க வேண்டும், என்று இதுவரைக்கும் ஒரு அரசியல்வாதிகளும் பேசியதாக தெரியவில்லை.

பிரதமர் ஹரினி ஒரு கல்விமான். ஒரு விரிவுரையாளராக இருந்துள்ளார். அவருக்கு ஒரு தூர நோக்கு இருக்கின்றது. ஆனால் எந்த அளவுக்கு சிங்கள அரசியல்வாதிகள் அவருக்கு ஒத்துழைப்பார்கள் என்று தெரியவில்லை.

ஏனென்றால் அனுரகுமார திசநாயக்க வரும்பொழுது ஒரு பரபரப்பாகத்தான் வந்தார். ஆனால் இன்றை வரைக்கும் எந்தவிதமான மாற்றமும் கொண்டு வரவில்லை. ரணில் விக்ரமசிங்க காலத்தில் என்ன நடைமுறையில் இருந்ததோ அந்த நடைமுறை தான் இன்றைக்கும் பேணப்படுகிறது.

ஒரு காலத்தில் கல்வியில் மலையக மக்கள் பாதிப்பைச் சந்தித்திருந்தனர். ஆனால் இன்றைக்கு மலையக அரசியல்வாதிகள் எடுக்கின்ற சில நடவடிக்கைகள் காரணமாக அங்கு கல்வித்தரம் உயர்ந்து கொண்டு வருகின்றது. அதேபோல முஸ்லிம் அரசியல்வாதிகள் எடுக்கிற நடவடிக்கைகள் காரணமாக முஸ்லிம்களின் கல்வித்தரம் உயர்ந்து கொண்டு வருகின்றது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் எவருமே கல்வியிலே எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை.

• • •

# சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 80வது ஆண்டில் ஈழத்தமிழர் இறைமையின்

# தொன்மை குறித்து சில தெளிவுகள்

- **நீதியரசர் சச்சி பொன்னம்பலத்தின் "சிறிலங்கா-தமிழர் தேசியப் பிரச்சினையும் தமிழர் விடுதலைப் போராட்டமும்" நூலிருந்து சில தரவுகள்**
- **சிறிலங்காவின் இன்றைய அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்கா இரு தேச இனங்களின் இறைமைகளின் சமத்துவத்தை உறுதிப்படுத்தி நாட்டை பொருளாதார பெருவீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கான சில வரலாற்று வழிகாட்டல்**

மூத்த அரசியல் ஆய்வாளர்
**சூ. பற்றிமாகரன்**

ஈழத்தமிழர் இறைமையை இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனி 1796 இல் டச்சுக் காலனித்துவ அரசிடம் இருந்து கைப்பற்றி மதராசில் இருந்து ( இன்றைய சென்னை) தமிழகத்துடன் இணைந்ததாக முழு இலங்கையையும் 1802 வரை ஒரே சட்டத்தில் ஒரே நிதியுடன் ஆட்சிப்படுத்தியமை ஈழத்தமிழர் ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட வரலாற்றின் முதல் தொடக்கமாகவுள்ளது.



சேர். கியூ கிளக்கோன் (Sir Hugh Cleghorn) இலங்கைக்கான முதலாவது காலனித்துவ செயலாளர், தனது 1799ம் ஆண்டு 'கிளக்கோன்' அறிக்கையில், "இருதேச இனங்கள் இலங்கைத் தீவின் நிலத்தை இரண்டாகக் கூறுபோட்டுத் தமக்குள் வைத்துள்ளனர். தெற்கின் உட்பகுதியிலும் மேற்குப் பகுதியில் வளவை ஆறுமுதல் சிலாபம் வரையும் சிங்களவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மலபார்காரர்கள் (தமிழர்களுக்கு அரபுநாட்டு வணிகர் அல்பரூனி அறிமுகம் செய்த சொல். தமிழையும் மலபார் மொழி என்றே அரபு நாட்டவர் வழி போர்த்துக்கேயர் முதல் முதற்கட்ட ஆங்கில ஆளுநர்களான சேர் றொபெர்ட் பிறவுணிங், சேர். எமேசன் ரெனென்ற் ஆகியோரும் பயன்படுத்தினர் என்பது முனைவர் காரைசுந்தரம்பிள்ளை அவர்களின் வடஇலங்கை நாட்டார் அரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முனைவர் பட்ட நூலில் 140வது பக்கத் தகவல் ) இலங்கையின் வடக்கு கிழக்கு மாவட்டங்களை தமதாகக் கொண்டிருக்கின்றனர். இந்த இருதேச இனங்களும் தங்களின் மதம், மொழி, நடத்தைகள் என்பவற்றில் முற்றிலும் வேறுபட்டவர்கள்." எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை. தமிழக - ஈழத்தமிழர்களை தமிழினத்தைக் குறிக்கும் மலபார்களாகவே கருதி 1796 முதல் 1802 வரை ஈழத்தையும் தமிழகத்தையும் ஒரே ஆட்சி அலகாக ஆட்சி செய்தமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறது.

வடக்கின் நாகதீப ஆட்சி மேற்கில் சிலாபத்தில் இருந்து கிழக்கே திருகோணமலை வரை இருந்த ஆட்சிப்பிரதேசம் என கி.பி. 2ம் நூற்றாண்டின் யாத்திரிகரான பிலோமி (Ptolemy) குறித்தமை 1799 இலும் கிளக் கோனின் அறிக்கையிலும் உறுதியானது முக்கியமான விடயமாக உள்ளது.

சேனன் குடிக்கன் தமிழ் அரசர் ஆட்சிகள் கி.மு 177-155 இல் நிலவியமை பற்றிய குறிப்புக்களும் தமிழ் அரசன் எல்லாளன் அநுராதபுரத்தில் ஆட்சியினை கி;மு 145-101 வரை ஆட்சிப்படுத்திய வரலாற்றுக் குறிப்புக்களும். மகாவம்சத்தின் 24வது அதிகாரத்து சிங்கள அரசு குறித்த தொன்மத்திலும் கூட துட்டகைமுனு தனது தந்தைக்குப் போர் பிரகடனம் செய்தைக் கூறிய பொழுது அவர் மகாகங்க என அழைக்கப்பட்ட இன்றைய மகாவலி கங்கைக்கு அந்தப் புறத்தில் தமிழர்கள் ஆளட்டும் இந்தப் புறத்தில் நாங்கள் ஆளுவோம் எனச் சமரசம் செய்ய முயன்ற குறிப்புக்களும் கூடவே துட்டகைமுனு தென்கிழக்கில் மகியங்கனையை ஆண்ட சாத்தன் என்ற தமிழரசனை வென்று தொடர்ந்து 31 தமிழ்ச் சிற்றரசர்களை வென்று அநுராதபுரத்தில் எல்லாளனுடன் போருக்கு வந்தான் எனக் கூறியிருப்பதும் ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தாயகமாக வடக்கு கிழக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இருந்து வந்துள்ளமைக்கான மக்கள் வரலாறு நினைவுகளாக உள்ளன.



ஆயினும் கி. பி 1214 முதல் கி.பி 1621 வரை 407 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசு ஈழத்தமிழர்களின் அரசாக சமகால வரலாற்றில் நிலைபெற்றிருந்து 1505இல் கோட்டே சிங்கள அரசில் போரத்துக்கேயர் உடைந்த கப்பலைப் பழுதுபார்க்கக் கால்வைத்து கோட்டே அரசைக் கைப்பற்றிய பொழுது கோட்டே அரசன் விதியபண்டாராவுக்கு நல்லூரில் யாழ்ப்பாண அரசு அரசியல் புகலிடம் கொடுத்துப் பாதுகாத்ததும். அச்சமயம் விதியப்பண்டார வெடி மருந்து தயாரிப்பில் மரணம் அடைந்த பொழுது அவருக்கு பூதவராயர் நடுகல் கோயிலை அமைத்துத் தமிழர் பண்பாட்டு முறையில் வீர வணக்கத்தை யாழ்ப்பாண அரசு செய்தமை சிங்களவர்களுக்கான பாதுகாப்புத் தோழமையாகவும் யாழ்ப்பாண அரசு விளங்கியது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாக உள்ளது.

வடஅமெரிக்க முஸ்லீம் யாத்திரிகரான இபின் பட்டுடா 1344 இல் யாழ்ப்பாண அரசரான ஆரியச் சக்கரவர்த்தியினைச் சந்தித்த பின்னர் அவருடைய அரண்மனையின் பிரமாண்டத்தையும் அனைத்துலக வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கப்பல் அணிகளின் பெருக்கத்தையும் அரசரின் அனைத்துலகத்தவரை வரவேற்று விருந்தளித்து மதிப்பளிக்கும் பெரும்பண்பையும் வியந்து பாராட்டியமையும் இவ்விடத்தில் மீள்நினைவு படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

மேலும் 1802 இல் நெதர்லாந்துடன் பிரித்தானியா செய்து கொண்ட அமீன்ஸ் உடன் படிக்கையின் படி (Treaty of Amiens, Holland) இலங்கைத் தீவு பிரித்தானியா முடிக்குரிய அரசாக மாற்றப்பட்டதன் பின்னர் அடுத்து வரும் 30 ஆண்டுகளும் பிரித்தானியா காலனித்துவ அரசாங்கம் ஈழத்தமிழர்களின் அரசுக்குரிய பகுதிகளையும் சிங்களவர்களின் அரசுக்குரிய பகுதிகளையும் தனித்தனியான அலகுகளாகவே ஆட்சிப்படுத்தினமை இலங்கைத் தீவில் இரு இறைமையுள்ள அரசுக்களை பிரித்தானியாகைப் பற்றியது என்பதற்கான வரலாற்றுச் சான்றாக உள்ளது.



இக்காலத்தில் 10.07. 1813இல் பிரித்தானியா தனது சிலோன் அரசாங்கத்தின் ஆட்சி மொழியான ஆங்கிலத்துடன் பயன்படுத்த வேண்டிய மொழிகள் குறித்து சிந்தித்த பொழுது அக்காலத்து தனியான யாழ்ப்பாணப் பட்டினத்துக்கும் கரையோரச் சிங்களப் பகுதிகளுக்கும் பிரித்தானியா ஆளுநராக இருந்த சேர். ரெபேர்ட் பிறவுணிங் அவர்கள் காலனித்துவச் செயலாளருக்கு அனுப்பிய நெறிப்படுத்தல் கடிதத்தில் " தமிழ்மொழி போத்துக்கேயத்துடன் கலந்து எல்லா மாகாணங்களிலும் வழக்கில் உள்ளது. புத்தளத்தில் இருந்து மட்டக்களப்பு அடங்கலாக வடக்கு முழுதும் தாய்மொழியாக உள்ளது. எனவே நான் தமிழ் மொழியையும் சிங்களத்துடன் சமமாகப் பயன்படுத்தம்படி ஆணைப்படுத்துவதை உங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். இதனை நீங்கள் எதிர்க்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தமை தமிழும் சிங்களமும் இலங்கைத் தீவு முழுவதும் மக்களின் வழக்கு மொழியாக இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றாக உள்ளது.

கடைசி நாலு அரசர்களையும் தமிழர்களாகவே கொண்டிருந்த கண்டி சிங்கள அரசை 1815இல் பிரித்தானிய காலனித்துவ அரசு கைப்பற்றியதன் பின்னர் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் வன்னித் தமிழரசின் கடைசி மன்னனான பண்டார வன்னியன் 31.10. 1832 இல் கற்சிலை மடுவில் உயிரிழந்த பின்னரே 1833இல் பிரித்தானியரால் தாம் விரும்பியவாறு தங்களின் சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த அதுவரை இலங்கைத் தீவின் வரலாற்றில் என்றுமே

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# கிழக்கின் விவசாயம்: விவசாயிகள் கலக்கம்

பா.அரியநேத்திரன்

தாயகத்தமிழ் நிலமான வடக்கு கிழக்கில் தன்னாதிக்கமுள்ள உற்பத்தித் துறையாக விவசாயத்துறை விளங்குகின்றது. இவ்விரு மாகாணங்களினதும் பொருளாதாரத்தில் 15 சதவீத மான பங்களிப்பை விவசாயத்துறை வழங்கி வருவதுடன் 65 சதவீதமானோர் வாழ்வாதாரத்திற்கு தங்கியிருக்கும் துறையாகவும் இது செயற்பட்டு வருகின்றது. நிலப்பாவனை என்ற வகையில் விவசாயச் செய்கைக்காக கிழக்கு மாகாணத்தின் 42 சதவீதமான நிலப்பரப்பும், வடமாகாணத்தின் 33 சதவீதமான நிலப்பரப்பும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விரு மாகாணங்களின் பிரதான விவசாயப் பயிராக நெல்லே காணப்படுகின்றது. வடமாகாணத்தில் 115,049 ஹெக்டெயர் நிலப் பரப்பிலும், கிழக்கு மாகாணத்தில் 324,455 ஹெக் டெயர் நிலப்பரப்பிலும் மொத்தமாக கால போகம், சிறுபோகம் ஆகிய இரு போகங்களிலும் பயிர்ச் செய்கை இடம்பெறுகிறது.



நெல் உற்பத்தியின் முதன்மை மாகாணமாக கிழக்கு மாகாணம் இருந்து வருவதுடன் இரு பருவங்களிலும் செய்கை பண்ணக்கூடிய நிலம், நீர் மற்றும் காலநிலை சூழல் காணப்படும் பிரதேச மாகவே கிழக்கு மாகாணமும் உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பருவகாலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் நீரை நம்பியே நெல் விவசாயச் செய்கை இடம்பெறுகிறது. இவ் வகையில் பாரிய, நடுத்தர, சிறிய குளங்களினை அபிவிருத்தி செய்து பருவகாலத்தில் பெறப் படும் நீரை பத்திரப்படுத்தி அதனை அடிப் படையாகக் கொண்டே சிறுபோக பயிர்ச் செய்கை இடம்பெறுகிறது. இது ஏலவே ஒழுங்க மைக்கப்பட்ட நீர்க்கட்டுமானங்களை அடிப்படை யாக கொண்டுள்ளது.

குளங்களில் நீர் சேகரிக்கப்பட்டவுடனேயே அதன் விளைச்சல் பரப்பிலுள்ள விவசாயிகளினது உரிமம் ஆகிவிடுகின்றது. இதனை அடிப்படையாக கொண்டுகமநலஅபிவிருத்திகட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பயிர்ச்செய்கை போகத்திட்டங்கள் முன்மொழியப்பட்டாலும் நெல்காணிச்சட்டத்தின் கீழ் நீர்உரிமை பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே நீர் பங்கிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதால் நெல்விவசாயத்தின் மீது விவசாயிகள் கொண்டுள்ள அதீத விருப்பை இலகுவில் மாற்றிக் கொள்ள முடிவதில்லை.

இதனை ஓரளவேனும் கட்டுப்படுத்தி மாற்றுப் பயிர்ச்செய்கை முறையை அறி முகப்படுத்துவதற்கு நீர் உரிமையற்ற, விளை நிலங் களுமற்ற மேட்டு நிலக் குடியிருப்பாளர்களுக்கு ஏற்றவாறான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி ஒவ்வொரு பாரிய, நடுத்தர குளங் களிலுமுள்ள நீரில் ஒரு பகுதியை பயன்திறன் வாய்ந்ததாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வருகிறது. அத்துடன் அதிக வறு மைக்குட்பட்டுள்ள குடும்பங்களின் பகுதியில் பயிர்ச்செய்கை நிலங்களற்ற மேட்டுக் குடியிருப்பாளர்களே அதிகமாகக் காணப்படுவதி னால் இந்த மாற்றுச் சிந்தனை கவனத்தில் எடுக் கப்பட வேண்டும்.



உற்பத்தி தொழில்துறை என்ற பகுதியின் கீழ் எமது பிரதான உணவான அரிசியின் உற் பத்தியை நாம் தன்னிறைவு மட்டத்தில் பேணி வருகின்றோம். ஆனாலும் இதற்காக இடப்பட்ட முதலீட்டின் அளவுடன் ஒப்பிடும் போது இது பயன்விளைவு மிக்கதா என்ற கேள்விக்கு நாம் விடையளிக்க வேண்டியுள்ளோம். நவீனமயப் படுத்தப்பட்ட விவசாயச் செய்முறைகளை பயன் படுத்தி எமது பாரம்பரிய விவசாய முறையை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

நெல் விவசாயம் தொடர்பில் மாகாண மட்டத்தில்நோக்கும்போதுகிழக்குமாகாணத்திலே அதிக நெல் விளைச்சல் இடம்பெறுகிறது. 2024,ஆம் வருடத்தின் பெரும்போகத்தில் ஏறக் குறைய 199,855 ஹெக்டேயர்களில் நெல்விளைச் சல் திட்டமிடப்பட்டு 190,584 ஏக்கர்களில் நெல்விளைவு செய்யப்பட்டதுடன் 1,045,159 மெற்றிக்தொன் விளைவும் இதே ஆண்டின் சிறு போகத்தில் 124,600 ஹெக்டயர்களில் திட்ட மிடப்பட்டு 118,134 ஹெக்டயர்களில் பயிரிடப் பட்டு 578,500 மெற்றிக்தொன் விளைச்சல் பெறப் பட்டுள்ளது.

இவ்வகையில் இம்மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவு நெல் விளைச்சல் இடம்பெறுகிறது. இம்மாவட்டத்தில் 149,398 ஹெக்டயர்களில் நெல் விதைக் கப்படுவதுடன்மாகாணமட்டம், மாகாணங்களுக்கு இடையிலானது, மகாவலி ஆகிய மூன்று பிரதான வகைப்பாட்டின் கீழ் உள்ளடங்கும் நிலங்களில் முகாமைத்துவத்தின் கீழ் இப்பயிர்ச்செய்கை இடம்பெற்று வருகின்றது.

தற்போது (2025, ஜனவரி) பெய்து வரும் கடும்மழையால் கிழக்கு மாகாணத்தில் விவசாய செய்கை பாதிப்புள்ளாகியுள்ளது கல்லோயா குளத்தின் கரை இடிந்தமையால் அம்பாறை மாவட்டத்தில் ஏறக்குறைய 600, ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதுபோல் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பல குளங்கள் திறந்து விடப்பட்டதாலும் ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தில் இம்முறை பெரும்போக நெற்செய்கையில் எதிர்பார்த்த விளைச்சலை பெறமுடியாது.

விவசாயிகளுக்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசால் நட்ட ஈடு எந்தவகையில் வழங்குவார்கள் என்பது தெரியவில்லை.

கடந்த 2022, நவம்பர்,10,ல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையம் மற்றும் மட்டக் களப்பு மாவட்ட வர்த்தக கைத் தொழில் விவசாய சம்மேளனம் என்பன இணைந்து “பொருளாதார நெருக்கடி மற்றும் ஒருங் கிணைந்த விவசாயத்திற்கான தீர்வுகள்” எனும் தொனிப்பொருளில் மாவட்ட விவசாயிக ளின் எதிர்கால நன்மை கருதிய விசேட கலந்துரை யாடலொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. ஆனால் அதன்பின்னர் இந்த மையத்தால் எதிர்பார்த்த நன்மைகள் எதுவும் இல்லை என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.



அரசாங்கங்களை பொறுத்தவரை கடந்த கால ஆட்சிகளில் இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தன, சந்திரிகா, பிரமதாச, விஜயதுங்க, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் அரசு தொடக்கம் தற்போதைய அநுர அரசு வரை விவசாயத்துறையை முன்னேற்று வதாக பல திட்டங்களை முன்வைத்து விளம்பரம் செய்தாலும் கிழக்கு மாகாணத்து விவசாயிகளை பொறுத்தவரை காலம் காலமாக ஏதோ ஒரு பிரச்சனைகளை எதிர் நோக்கியே நெற் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

அது உரமானியமாக இருக்கலாம், நீர் பற்றாக்குறையாக இருக்கலாம், நெல்லிற்கான உத்தரவாத விலைகளாக இருக்கலாம், நோய் தடுப்பு கிருமிநாசினி, பீடை எதிர்ப்பு, அறுவடை, விவசாயக்கடன் என சகல விடயங்களிலும் தொடர்ச்சியாக ஏதோ ஒரு பிரச்சனைகளை எதிர்கொண்டே கிழக்கு மாகாண விவசாயிகள் தமது விசாயத்தொழிலை செய்கின்றனர்.

பிரதான விவசாயமாக நெற்செய்கை காணப்பட்டாலும் ஏனைய மேட்டுநில பயிர்களான சேனைப்பயிர்கள் சோழன், இறுங்கு, பயறு,

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# தொடரும் மழை: பாதிப்படையும் கிழக்கின் விவசாயம்!



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் பெருமளவான பாதிப்புக்களை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். வடக்கு கிழக்கு, வட மத்திய , ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் இந்த பாதிப்பு அதிகளவில் ஏற்பட்டுள்ளது.

கனமழை காரணமாக குடியிருப்பு பிரதேசங்கள் உட்பட நெற் செய்கைகளும் பெருமளவில் பாதிப்படைந்துள்ளன. பெரும் போக அறுவடை இடம் பெறவுள்ள நிலையில் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் அதிகளவான விவசாய செய்கையாக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனடிப் படையில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூதூர், குச்சவெளி, சேருவில, கோமரங்கடவல, மொறவெவ, தம்பலகாமம் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.



மேலும், மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 வீடுகளும், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 5 வீடுகளும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 2 வீடுகளும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில்2 வீடுகளும்பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இது குறித்து இடர் முகாமைத்துவ நிலைய அறிக்கையின் பிரகாரம் இற்றை வரைக்கும்( 23.01.2025) இலங்கையில் மொத்தமாக 22368 குடும்பங்களை சேர்ந்த சுமார் 73586 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் வட மத்திய மாகாணத்தில் மொத்தமாக 1433 குடும்பங்களைசேர்ந்த4747 நபர்களும், வடக்கு மாகாணத்தில் 4427 குடும்பங்களை சேர்ந்த 15549 நபர்களும் , கிழக்கு மாகாணத்தில் 16068 குடும்பங்களை சேர்ந்த 51693 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்தநிலையில்கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் 304 குடும்பங்களை சேர்ந்த 960 நபர்களும் ,அம்பாறை மாவட்டத்தில் 11025 குடும்பங்களை சேர்ந்த 35800 நபர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4739 குடும்பங்களை சேர்ந்த 14933 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவானவர்கள் தினக் கூலி தொழிலாளிகளாக காணப்படுகிறார்கள். திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பகுதியில் கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மாவடிச் சேனை இந்து மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 119 குடும்பங்கள் இவ்வாறு தங்கவைக்கப்பட்டு வெருகல் பிரதேச செயலகம் ஊடாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் மாவிலாறு திறக்கப்பட்டமையால் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதுடன் மட்டக்களப்பு ,திருகோணமலை பிரதான வீதியின் மாவடிச் சேனை வீதி வழியாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது .

இவ்வாறாக இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உடனடியாக நிவாரணங்கள் வழங்குவது குறைந்தளவில் தான் உள்ளது . கடந்த அனர்த்தங்கள் போன்று இம் முறையும் கன மழையால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் நெற் செய்கை அழிவைச் சந்தித்துள்ளது. கடன் பட்டு செய்த விவசாய செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது போன்ற அனர்த்த நிலை காரணமாக கடல் தொழில் உள்ளிட்ட பல தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் இவர்களுக்கான நிவாரணங்களை மாத்திரம் வழங்காது விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகைகளையும் வழங்க முன்வர வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.



கன மழை காரணமாக மேட்டு நிலப் பயிர்ச் செய்கையான கத்தரி, வெண்டி ,மிளகாய் உட்பட பல பயிரினங்களும் பாரிய அழிவை சந்தித்துள்ளது. இவர்களுக்கான இழப்பீடுகளையும் வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

கடந்த 2024 ம் ஆண்டு மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ள அபாயம் மூலமாக அழிவடைந்த விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இருந்த போதிலும் பாதிக்கப்பட்ட நெற் செய்கை பகுதிகளை விவசாய காப்புறுதி சபை பார்வையிட்ட போதிலும் இழப்பீடுகள் வழங்கப்படாமை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் , விவசாய செய்கை அழிவுகள் உட்பட அனைத்திற்கும் அரசாங்கம் உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும்..

• • •

# மீறப்படும் உரிமைகள்

துரைசாமி நடராஜா

பெண்கள் சமூக அபிவிருத்தியின் அச்சாணிகளாக விளங்குகின்றனர். என்ற போதும் சில சமூகங்களில் பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத நிலையில் பல்வேறு உரிமை மீறல்களுக்கும் அவர்கள் உள்ளாகி வருவதனை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. இந்த வகையில் மலையக பெண் களும் உள்ளடக்குகின்றனர். இதனிடையே இலங்கையின் மலையக தமிழ்ப் பெண்கள் ஒடுக்கு முறைகள் பலவற்றுக்கும் ஆளாகியுள்ள நிலையில், இதனால் அவர்களின் உரிமைகள் பலவும் மீறப்பட்டு வருவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.



'பெண்கள் சமூகத்தின் கண்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். பெண்களால் தேசம் செழுமையடைகின்றது. எனவே அவர்களின் உரிமைகள் உரியவாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு பொருத்தமான இடங்களில் தீர்மானம் மேற்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றன. பெண்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிப்படுத்துவதன் ஊடாக நாட்டில் மறுமலர்ச்சிக்கு வித்திட முடியும் என்பதும் முக்கியஸ்தர்களின் எதிர்பார்ப்பாகும். உண்மையான சமத்துவம் மற்றும் நீதிக்காக அதிகமான பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று இந்தியாவின் காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அண்மையில் வலியுறுத்தி இருந்தார். பெண்கள் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த ஆர்வமாக இருக்க வேண்டும். அரசியலில் பெண்களின் குரலை வலுப்படுத்துவதால் சாதக விளைவுகள் பலவற்றுக்கும் அது அடித்தளமாக அமையும். அரசியல் மற்றும் முடிவு எடுப்பதில் பெண்களுக்கும் சம பங்களிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் ராகுல் காந்தி இதன்போது ஆழமாக வலியுறுத்தி இருந்தார்.

### புது வடிவத்துடன் நெருக்கீடுகள்

பெண்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் வலுப்படுத்தப்படுமிடத்து இது சாதக விளைவுகள் பலவற்றுக்கும் உந்துசக்தியாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. குடும்பம், சமூகம், நாடு, உலகம் என்றவாறு இதன் நன்மைகள் பரந்துபட்டனவாக அமையும். எனவே இது தொடர்பில் சகலரும் கவனம் செலுத்துவது அவசியமாகும். பெண்களின் வகிபாகத்தை சரிவர பெற்றுக் கொள்ளாமல் அவர்களை புறந்தள்ளுகின்ற எந்தவொரு சமூகமோ, நாடோ அபிவிருத்தி அடைந்ததாக சரித்திரமே கிடையாது என்பதை சகலரும் சரிவர விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில் மலையக பெண்கள் தொடர்பாக நாம் நோக்குகின்றபோது அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் நாளுக்கு நாள் புது வடிவத்துடன் மேலோங்கி வருகின்றன. தொழிற்றுறையில் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் அண்மைகாலமாக அதிகரித்த போக்கினை வெளிப்படுத்தி வருகின்றன. பொருளாதார சவால்கள் இவர்களை பெரிதும் ஆட்டிப் படைக்கும் நிலையில் இப்பெண்கள் மாற்றுத் தொழிற்றுறையை நாடிச் செல்வதும் வழக்கமாகியுள்ளது. மேலும் குடும்ப வன்முறைக்கு பெண்கள் ஆளாகி வருவதோடு இதனால் சில பெண்கள் உடல் மற்றும் உளரீதியான பாதிப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளமையும் தெரிந்ததேயாகும் . இத்தகைய சம்பவங்களால் இன்னும் சில பெண்கள் விசேட தேவை கொண்டவர்களாக மாற்றம் பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. கூடிய நேரம் வேலை செய்து குறைந்தளவு ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்ற ஒரு சமூகமாக மலையகப் பெண்கள் விளங்குகின்றனர்.

மலையக பெண்கள் தேயிலைத் தொழிற்றுறையில் கணிசமான வருமானத்தை பெற்றுக் கொள்ளாத நிலையில் நகர்ப்புறம் மற்றும் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் இடம்பெயர்ந்து வருகின்றனர். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று இப்பெண்கள் உழைத்தனுப்பும் பணம் நாட்டின் தேசிய வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கி வருகின்றது. 1948 க்கு முன்னர் பெண்கள் தோட்டத்துறையை நோக்கி உள்வருவது வரலாற்று போக்காகவிருந்தது. எனினும் இன்று இந்த நிலை மாறி மலையகப் பெண்கள் தோட்டங்களிலிருந்து நகரங்களை நோக்கியும், வெளிநாடுளை நோக்கியும் தொழில்தேடிச் செல்வது வழக்கமாகியுள்ளதோடு இதுவொரு சமூகப் பிரச்சினையாகவும் தோற்றம் பெற்றுள்ளது.

### வெளிநோக்கிய நகர்வு

1992 இல் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவங்களை தனியார் கம்பனிகளுக்கு வழங்கியதைத் தொடர்ந்து அக்கம்பனிகள் தோட்டங்களில் மேற்கொண்ட தொழிலாளர் குறைப்பு மற்றும் காலத்திற்கு முந்திய ஓய்வூதியக் கொள்கைகளின் காரணமாக பெருமளவான பெண் தொழிலாளர்கள் வேலையை இழந்தமை, புதிதாக தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதை கம்பனிகள் நிறுத்தியமை என்பவற்றின் காரணமாக வயது வந்த பெண் தொழிலாளர்கள் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களாகவும், வீட்டுப் பணிப்பெண்களாகவும் நகர்ப்புறங்களையும் வெளிநாடுகளையும் நோக்கி தொழில்களின் நிமித்தம் இடம்பெயர்ந்தனர். அதேவேளை பிள்ளைகளால் கைவிடப்பட்ட மற்றும் வருமான வாய்ப்புகளின்றி மிகவும் வறுமை நிலைக்குட்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் வயது முதிர்ந்த பெண்கள் நகர்ப்புறங்களை நோக்கி வீட்டு வேலைக்காரர்களாகவும் கிராமப் புறங்களில் உள்ள சிற்றுடைமைத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவும் தொழிலுக்காக தோட்டங்களிலிருந்து வெளிநோக்கிய நகர்வினை மேற்கொண்டதாக பேராசிரியர் எஸ்.விஜயச்சந்திரன் தனது கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டுகின்றார். தொழில் நகர்வுக்கு உட்படும் மலையக இளம் பெண்களில் 70.58 வீதத்தினர் திருமணம் முடிக்காதவர்களாகவும், 27.65 வீதத்தினர் திருமணம் முடித்தவர்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை பெண் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டங்கள் பல காணப்படுகின்றன. இவற்றுள் 1948 ம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், 1966 ம் ஆண்டின் பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1958 ம் ஆண்டின் பால் சார்ந்த தொழில் பாகுபாட்டை தடை செய்வதற்கான 111 ஆம் இலக்க உடன்படிக்கை, விசேடமாக பெண்களுக்கான இரவு நேர வேலை, பிரசவ பாதுகாப்பு, குடும்பப் பொறுப்பு, பாகுபாடற்ற தொழில் மற்றும் தொழில் இடப்பெயர்வு என்பன தொடர்பான சர்வதேச தொழில் தாபனம் மற்றும் அதன் அங்கத்துவ நாடுகளுடன் மேற்கொண்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகள் எனப்பலவும் இதில் உள்ளடங்கும். இச்சட்டங்களின் ஊடாக தொழில் நிறுவனங்கள் தமது தொழில் நிலையங்களில் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. எனினும் முறைசார்ந்த மற்றும் முறைசாராத துறைகளை நோக்கி நகரும் பெண் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் ஆண்களைக்காட்டிலும் தொழில் உரிமை சார்ந்த விடயங்களில் அதிகளவில் புறக்கணிக்கப்படுவதாகவும், பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படுவதாகவும் ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.




இதேவேளை இலங்கையில் தொழில் புரிபவர்களுக்கான சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறைகள் வழங்கப்படும் நிலையில் மலையகப் பெண்கள் பலருக்கு இது எட்டாக் கனியாக உள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. தோட்டத்துக்கு வெளியில் தொழில் புரியும் மலையக இளம் பெண்களில் 35.79 வீதத்தினருக்கு சுகவீன விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை. மேலும் இவர்களில் 23.16 வீதமானோரே வருடாந்த கொடுப்பனவுடன் கூடிய போனஸ் விடுமுறைக்கு உரித்துடையவர்களாக உள்ளனர். இவர்களில் 76.84 வீதமானோருக்கு வருடாந்த போனஸ் விடுமுறை வழங்கப்படுவதில்லை. தோட்டங்களுக்கு வெளியில் தொழில் புரியும் மலையக இளம் பெண்களில் 25.29 வீதமானோர் மட்டுமே பிரசவ விடுமுறையினை பெற்றுக் கொள்வதுடன், 12.63 வீதமானோர் மட்டுமே பிரசவ சகாயக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்கின்றனர்.

### மனித உரிமைகள் ஆணைக்குழு

மலையக பெண்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருந்து வருவதால் பாதக விளைவுகள் பலவும் மேலோங்குவதற்கு இது வழிவகுக்கும் என்று பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.சோபனாதேவி வலியுறுத்தும் அதேவேளை பெண்கள் சகல துறைகளிலும் தன்னை உறுதிப்படுத்திக்கொள்ள

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# முத்துக்குமாரின் தியாகம்:

2009 ஆம் ஆண்டு ஜனவரி 29 அன்று, சென்னை சாஸ்திரி பவனில் முத்துக்குமாரின் தீக்குளிப்பு, ஈழத் தமிழர் உரிமைக்கான ஆதரவுப் போராட்டத்தின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு தருணமாக அமைந்தது. இந்திய அரசின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை குறித்த அவரது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக, முத்துக்குமார் தனது தியாகத்தை அர்ப்பணித்தார்



ழர்களுக்கான உரிமைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். முத்துக்குமாரின் இறுதி அறிக்கையில் "மாணவர்களும் இளைஞர்களும் தனது உடலை துருப்புச்சீட்டாகக் பயன்படுத்த வேண்டும்" என்ற வேண்டுகோள் ஒரு புதிய போராட்ட மனோபாவத்தை உருவாக்கியது.

**தீக்குளிக்க தேர்ந்தெடுத்த இடத்தின் முக்கியத்துவம்**

**அரசியல் தலைவர்களின் எதிர்மறை செயல்பாடுகள்**

# தமிழ் இளைஞர்களுக்கான பாடம்



முத்துக்குமாரின் தீக்குளிப்பிற்கு சாஸ்திரி பவனின் தேர்வு சாதாரணமானதல்ல. இந்திய அரசின் முக்கிய அலுவலகங்கள் அமைந்த அந்த இடம், ஈழத் தமிழர்களின் உரிமைகளை ஒடுக்க சிறிலங்கா அரசுக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவிகளின் அடையாளமாகவே பார்க்கப்பட்டது. இந்திய அரசின் செயல்பாடுகள் ஈழத் தமிழர்களின் உயிரிழப்புக்கும், உலக நாடுகள் மத்தியில் நிலவிய மௌனத்திற்கும் காரணமாக இருந்ததை முத்துக்குமார் உலகிற்கு அறிவிக்க நினைத்தார்.

### முத்துக்குமாரின் இறுதி அறிக்கை

தனது தியாகத்திற்கு முன்பாக, "விதியே! விதியே! என்செய் நினைத்திட்டாய் என் தமிழ் சாதியை...?" என்ற அரசியல் கருத்துடன் கூடிய அறிக்கையை முத்துக்குமார் எழுதி, சாஸ்திரி பவனில் இருந்த அனைவருக்கும் வழங்கினார். இதில், இந்திய அரசின் நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டு காட்டுவதோடு, தமிழர் சமூகத்தை அநீதிக்கு எதிராக எழுப்பும் நோக்கத்தையும் கொண்டிருந்தார்.

### தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட அதிர்வுகள்

முத்துக்குமாரின் தியாகம் தமிழ்நாட்டில் மாணவர்கள், இளைஞர்களிடையே பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. பலர் போராட்டங்களின் முன்னணியில் குதித்து, ஈழத் தமி

முத்துக்குமாரின் தியாகம் ஈழத் தமிழர்களுக்காக போராடுவதாக கூறிய தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களின் உண்மையான நிலைப்பாடுகளை வெளிக்காட்டியது. இவர்கள் முத்துக்குமாரின் கோரிக்கைகளைப் புறக் கணித்ததுடன், அவருடைய இறுதி வேண்டுகோளான "எனது உடலை துருப்புச்சீட்டாக்கி போராடுங்கள்" என்ற கருத்துக்கு எதிராக செயல் பட்டனர். இது, முத்துக்குமாரின் தியாகத்தின் உண்மையான நோக்கத்தை அவமதிக்கும் விதமாகவும், எதிராகவும் அமைந்தது.

### முத்துக்குமாரின் தியாகத்தின் நீட்சி

முத்துக்குமாரின் தியாகம் தமிழர் உரிமை போராட்டத்தில் மட்டும் அல்லாது, தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் சமூக விழிப்புணர்வின் அடையாளமாகவும் மாறியுள்ளது. அவரது தியாகம் தொடர்ந்து நினைவுகூரப்பட்டு, தமிழ் சமூகத்துக்கு வழிகாட்டும் ஒளியாக விளங்குகிறது.

### தமிழ் இளைஞர்களுக்கான பாடம்

தற்போதைய தமிழ் இளைஞர்களுக்கு முத்துக்குமாரின் தியாகத்தை எடுத்துச் சொல்வது அவசியமானது. முத்துக்குமாரின் தியாகம் தேசிய இன உரிமை மற்றும் நீதியின் உண்மையான அர்த்தத்தை அறிய உதவும். சமூகத்திற்காக தன்னலமின்றி போராடும் நோக்கத்தையும், ஈழத் தமிழர்களுக்கான ஆதரவையும் இளைஞர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். முத்துக்குமாரின் தியாகத்தை மரியாதை செய்வதற்கும், அவரது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், தமிழ்ச் சமூகம் அயராது உழைக்க வேண்டியது அவசிய மாகிறது.

**ஜோஸ்**

ஏமனின் குதீஸ் ... தொடர்ச்சி ...

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகத்தை ட்ரம் கேட்டுள்ளார். குதீஸின் நடவடிக்கைகள் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க மக்களுக்கு ஆபத்தை விளைவிப்ப தாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காசா பகுதி மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர்மாதத்தில் இருந்து குதீஸ் அமைப்பினர் இஸ்ரேல் மற்றும் அதற்கு ஆதரவான நாடுகளின் கப்பல்கள் மீது செங்கடல் பகுதிகளில் வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதுவரையில் அவர்கள் 300 இற்கு மேற்பட்ட ஏவுகணைகளையும், ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும் பயன்படுத்தியுள்ளதாக இஸ்ரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேல்' மீதும் பல ஏவுகணைத் தாக்குதல்களை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இதனிடையே காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் குதீஸ் அமைப்பினரால் கடத்தப்பட்ட கலக்ஸி லீடர் என்ற கப்பலின் பணியாளர்களை தாம் விடுவித்துள்ளதாக கடந்த புதன்கிழமை(22) குதீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய ... தொடர்ச்சி ...

என அதற்கு எதிராக கூகுள் நிறுவனத்தில் பணியாற்றுபவர்களும், செயற்பாட்டாளர்களும் தமது எதிர்ப்புக்களை தெரி வித்து வரு கின்றனர்.

தாம் இஸ்ரேலிய படையின ருக்கு உதவி செய்வதில்லை என கூகுள் நிறுவனம் தனது பணியாளர்களுக்கு தெரிவிக்கின்ற போதும், அது இஸ்ரேலய படையினருடன் இணைந்து பணியாற்றி வருவது அங்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹமாஸ் படையினரின் தாக்குதல்களை தொடர்ந்து தமக்கு கூகுள் நிறுவனத்தின் Vertex போன்ற மென்பொருட்களின் உதவி தேவை என இஸ்ரேலிய இராணுவம் கோரிக்கை விடுத்திருந்தது. அதேபோல கடந்த நவம்பர் மாதமும் கூகுள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு என்ற தொழில் நுட்பத்தை பயன் படுத்துவதற்கான கோரிக்கையை இஸ்ரேலிய படையினர் விடுத்திருந்ததை ஆவணங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

2021 ஆம் ஆண்டு Nimbus என்ற திட்டத்தின் அடிப்படையினல் கூகுள் மற்றும் அமேசன் நிறுவனங்கள் இஸ்ரேலுடன் செயற்கை நுண்ணிறிவு மற்றும் cloud storage போன்ற தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்வது தொடர்பான 1.2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான திட்டத்தில் கையொப்பமிட்டிருந்தன.

இஸ்ரேலிய படையினருக்கு கூகுள் நிறுவனம் உதவி செய்வதற்கு எதிராக குரல் கொடுத்த 50 இற்கு மேற்பட்ட பணியாளர்களை கூகுள் நிறுவனம் கடந்த வருடம் பதவியில் இருந்து நீக்கியிருந்தது. அமேசனுக்கு போட்டியாக இஸ்ரேலுக்கு உதவி செய்வதில் கூகுள் நிறுவனம் அதிக அக்கறை காண்பித்து வருவதாக அந்த பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

வோசிங்டன் போஸ்ட் பத்திரிகை அமேசன் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.



# ட்ரம்பின் மீள்வருகை

# உலகில் அமைதியை கொண்டு வருமா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்காவின் 47ஆவது அதிபராக டொனால் ட்ரம்ப் கடந்த திங்கட்கிழமை(20) பதவி யேற்றுள்ளார். அமெரிக்காவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் உருவாகுவதாக உலகம் உணருகின்றது. எதிர்வரும் 4 வருடங்களுக்கு யாரினாலும் எதிர்வுகூறமுடியாத மாற்றங்களை அவர் ஏற்படுத்துவார் என கருதப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு மிகப்பெரும் செல்வந்தராக எந்த அரசியல் அறிவும் அற்றவராக அமெரிக்காவின் அரசியலுக்குள் அவர் நுழைந்திருந்தார். ஆனால் இந்த முறை அது சற்று மாறுபட்டது. குடியரசுக்கட்சி தற்போது முழுமையாக அவரின் பின்னால் உள்ளது. அமெரிக்காவின் பங்குச்சந்தை முதலாளிகள், சிலிக்கன் வலி எனப்படும் தொழில்நுட்ப ஜாம்பவான்கள், அமெரிக்காவின் பெரும் செல்வந்தர்கள் என அவரின் பின்னால் பெருமளவான கூட்டம் ஒன்று உள்ளது.



புதிய அரசியல் சிந்தனை என ட்ரம் அடிக்கடி கூறும் வார்த்தைகள் என்பது 1917 ஆம் ஆண்டுக்கு பின்னர் அமெரிக்காவில் ஏற்படப்போகும் மிகப்பெரும் வெளிவிவகாரக் கொள்கையின் மாற்றமாகவே பலரும் பார்க்கின்றனர். கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஒரு புதிய உலக ஒழுங்கை ஏற்படுத்தப்போவதாக அமெரிக்காவின் புதிய வெளிவிவகாரச் செயலாளர் மார்கோ றுபியோ தெரிவித்துள்ளார்.

போருக்கு பின்னரான நடவடிக்கை என்பது வெறுமனவே கைவிடப்பட்டது ஒன்று அல்ல, ஆயுதங்கள் எமக்கு எதிராக திருப்பப்படும் நிகழ்வுகளையே நாம் காண்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதன் கருத்து என்னவெனில் அமெரிக்காவில் ஒரு மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கான அறிகுறிகளாகும்.

உக்ரைன் போரை 100 நாட்களுக்குள் முடிவுக்கு கொண்டுவருவேன் என தெரிவித்துள்ள அவர் ரஸ்யாவுடனான போர் எல்லை பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பதிலாக அவர் உக்ரைனை பலி கொடுக்க தயாராகிவிட்டார். அது மட்டுமல்லாது ஐரோப்பாவுக்கான உதவிகளையும் குறைப்பதற்காக திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் விடுவிக்கப்படும் வளங்களை மேற்கு பிராந்தியத்தில் கிறீன்லாந்து, கனடா, பனாமா கால்வாய் என பயன்படுத்துவது ட்ரம்பின் திட்டமாக இருக்கலாம். மெக்சிக்கோவும் ட்ரம்பின் திட்டத்தில் அடக்கம்.



அதிக வரிகளை வெளிநாட்டு பொருட்களுக்கு விதிப்பதன் மூலம் அமெரிக்காவின் பொருளாதாரத்தை மீண்டும் உற்பத்தித்துறைக்கு மாற்றுவது, அதன் மூலம் இறக்குமதிகளில் தங்கியிருப்பதை குறைப்பது அவரின் திட்டம். அதாவது சீனாவை தான் தனக்கு மிகப்பெரும் எதிரியாக ட்ரம்பின் ஆட்சி எண்ணுகின்றது. இந்த வியூகம் என்பது புதிய ஏகாதிபத்தியமாகும். அதாவது அமெரிக்கா தனது மிகப்பெரும் பொருளாதார மற்றும் படைத்துறையை பயன்படுத்தி தனது விருப்பங்களை நிறைவேற்ற முற்பட்டு நிற்கின்றது.

ட்ரம்பின் ஆட்சியின் எதிர்காலம் என்பது உள்ளூரிலும், வெளிவிவகாரக் கொள்கைகளிலும் எற்படுத்தும் மாற்றங்களில் தான் தங்கியுள்ளது. சட்டவிரோத குடியேற்றவாசிகளை அகற்றுதல் என்பது அவரின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று. அதாவது அமெரிக்காவில் பெரும் தொகையானபயங்கரவாதிகள்தங்கியுள்ளதாகவும், உலகில்உள்ளசிறைகள்அனைத்தும்வெறுமையாக உள்ளதாகவும் அங்கிருந்தவர்கள் அமெரிக்காவுக்கு அனுபப்பட்டுள்ளதாகவும் ட்ரம் அண்மைய நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.



அதாவது அமெரிக்காவின் வரலாற்றில் மிகப்பெரும் நாடுகடத்தல் ஒன்று நிகழலாம், மேலும் உக்ரைன் போரை 100 நாட்களுக்குள் முடிப்பது, உள்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவது இவை அனைத்தும் 2026 ஆம் ஆண்டு வரும் இடைக்கால ஆய்வுகளில் அவருக்கு ஒரு நன்மையை ஏற்படுத்தும்.



ஆனால் அதற்கான புறச்சூழல்கள் சரியாக அமைய வேண்டும், நிதியை சேமிப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து வெளியேறுவது, காலநிலைமாற்றத்தை கட்டுப்படுத்தும் பாரீஸ் உடன்பாட்டில் இருந்து வெளியேறுவது, நேட்டோவில் உள்ள நாடுகள் மீது நிதிச் சுமையை அதிகரிப்பது என்ற அவரின் நோக்கங்கள் உலகில் அமெரிக்காவை தனிமைப்படுத்தலாம். தனியாக தனது விரிவாக்கத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையே இது அமெரிக்காவுக்கு எற்படுத்தும்.




அதேசமயம், ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள ஐரோப்பாவை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

### சோல்பரி ஆணை ... தொடர்ச்சி ...

இருந்திராத "சிலோன்" என்னும் செயற்கையான ஒற்றையாட்சி கொண்ட அரசு ஒன்றையும் செயற்கையான தேசியமான "சிலோனிஸ்" தேசியம் ஒன்றையும் பிரித்தானிய காலனித்துவ அரசால் தமிழ் சிங்கள மக்களின் விருப்பின்றி உருவாக்க முடிந்தது என்பதும் இலங்கை தீவின் வரலாறாக உள்ளது.

1833இல் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் பிரித்தானியர்களின் இலங்கைகான சட்டசபைக்கு சட்டவாக்கத்தில் நிர்வாகத்தில் பரிந்துரைகள் வழங்குவதற்கு இலங்கையர்களை தாம் நியமனம் செய்து உள்நாட்டு மக்களை ஆட்சிப்படுத்தலை இலகுவாக்க முனைந்த பொழுது தமிழர்களின் தேச இனத்தன்மையையும் ( Tamil Nation), சிங்களவர்களின் தேச இனத்தன்மையையும் (Sinhala Nation) சமத்துவப்படுத்தி இரு தேச இனங்களில் இருந்தும் ஒவ்வொரு உறுப்பினர்களை நியமித்தமையும் வரலாறு.

கோல்புறூக் கமரோன் அரசியலமைப்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுது ஆறுமுகநாவலர்க்கு 11வயது. அடுத்த ஆண்டில் 1834இல் இவருடைய தந்தையார் பல கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்களை தமிழ்ப்படுத்திய வகையில் கிறிஸ்தவர்களிடை பெற்ற மதிப்பின் பின்னணியில் பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் யாழ் வெல்சியன் மிசன் கல்லூரிக்கு (பின்னர் யாழ் மத்திய கல்லூரியாகியது) ஆங்கிலம் கற்கச் சென்று ஆங்கிலத்திலும் கிறிஸ்தவத்திலும் பழக்கப்படுகின்றார். 19 வயதில் தமிழ் ஆங்கில ஆசிரியராக மட்டுமல்லாது பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராகவும் பரிணாமடைந்து பைபிளின் தமிழ்மொழியாக்கக் குழுவிலும் பங்கேற்கின்றார். ஆயினும் 24 வயதில் அம்பலவாண முதலியாருடன் சென்னை சென்று அங்குள்ள பள்ளிகளைப் பார்வையிட்டதன் பின்னர் 1847டிசம்பர் 31ம் நாள் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து முதன்முதலாகச் சைவப்பிரசங்கம் தொடங்குகின்றார். இந்த கிறிஸ்தவ மத எதிர்ப்பை சைவப் பண்பாட்டு மீட்பாக முன்னெடுக்கத் தொடங்கிய ஆறுமுகநாவலர் 1879 மே மாதம் 22ம் திகதி பிரித்தானிய சட்டசபைப் பிரதிநிதியாக 1833 முதல் 1879 வரை இருந்த சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் இடத்துக்கு அவரின் உறவினரான சேர். பொன்னம்பலம் இராமநாதனை நியமிக்க வேண்டுமென மக்கள் மத்தியில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் உரையாற்றிய பொழுது "தமிழரைத் தமிழர் அல்லாதவர் ஆளக்கூடாது" என்ற ஈழத்தமிழர் தேசியத்தன்மையை வெளிப்படுத்தினார். இதனாலேயே பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தனது பொதுவுடைமை நிலைப்



பாட்டையும் கடந்து ஆறுமுகநாவலரைத் தமிழ்த் தேசியத்தின் தந்தையென வரைவுசெய்தார். இதனால் "பண்பாட்டு மீட்டுணர்வு" மூலம் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான விடுதலையை முன்னெடுக்கும் வழமை ஈழத்து அரசியலில் ஆரம்பமாகியது. இது சைவ வேளாள மேலாண்மை ஈழத்தமிழர் அரசியலில் வழக்கமாகவும் வழிசெய்தது. ஆயினும் நாவலர் இந்து என்ற நிலையில் என்றுமே ஈழத்தமிழரை அடையாளப்படுத்தாது சைவர் என்ற நிலையிலேயே தனது பண்பாட்டு மீட்டுணர்வை முன்னெடுத்தார். சைவசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்று அழைக்க வேண்டாம். சைவக் கோயில்களைத் தமிழ்க்கோயில்கள் என அழைக்காதீர்கள். சைவம் ஒரு மதம். தமிழ் ஒரு மொழி. சைவரல்லாதவர்களும் தமிழர்களாக உள்ளனர் என்ற தெளிவான வரையறைகளை நாவலர் தனது தேசியத்தை பண்பாட்டு மீட்டுணர்வால் கட்டமைத்த பொழுது ஏற்படுத்தினார். ஆனால் அநகாரிக்க தர்மபாலர் பௌத்தமும் சிங்களமும் சிங்கள தேசியத்தின் தன்மையெனச் சிங்கள பௌத்த பேரினவாதத்தை உருவாக்கியமையே இன்றுவரை இலங்கைத் தீவு சமூக பொருளாதார அரசியல் ஆன்மிகத் தளங்களில் சிங்கள இனவெறி மொழிவெறி தன்மையினை வெளிப்படுத்தி முழு இலங்கைத் தீவையும் அமைதியற்ற பொருளாதார வளர்ச்சியற்ற ஈழத்தமிழின அழிப்பால் ஈழத்தமிழர்களின் நிலத்தை வளத்தை ஆக்கிரமிக்கும் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சித்தளமாக மாற்றியுள்ளது.

பிரித்தானிய காலனித்துவ அரசால் உருவாக்கப்பட்ட இந்தப் போக்குகளையும் அதன் விளைவுகளையும் இன்றைய சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்கா உண்மையுடனும் நேர்மையுடனும் உணர்ந்து இருதேச மக்களின் இறைமைகளும் சமமானதும் இலங்கையின்எல்லாக்குடிகளும்சமமானஅரசியல் உரிமைகளை அனுபவிப்பது உறுதியானதுமான அரசியல் அமைப்பு மாற்றங்களை கொண்டுவந்து அனைவருக்குமான பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளரச்சிகளையும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உறுதியான செயற்பாட்டுடன் முன்னெடுக்க இந்த வரலாற்று மீள்வாசிப்பு உதவ வேண்டும். இதற்கு எந்த சோல்பரி அரசியல் அமைப்பு 1945 ஏப்ரலில் இன்றைய சிக்கல்களைத் தோற்றுவித்ததோ அந்த சோல்பரி அரசியல் அமைப்பு அறிமுகம் செய்த சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையில் இருந்து வெளிவந்து சிறுபான்மை பெரும்பான்மை என்கின்ற பிரித்தானியக் காலனித்துவம் ஏற்படுத்திய வடிவங்களை விடுத்து இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகமும் மற்றைய பகுதிகளில் சிங்களவர்களின் வரலாற்றுத் தாயகமும் உள்ளது என்ற உண்மையின் அடிப்படையில் இருதேச மக்களதும் இறைமைகளைச் சமமாக மதித்து இலங்கையில் வர்த்தகத்தால் குடிகளாகவும் தொழில் பங்களிப்பால் குடிகளாகவும் உள்ள முஸ்லீம் மக்கள் மலையகத் தமிழ் மக்கள் அனைவரதும் அரசியல் உரிமைகளையும் உறுதி செய்து புதிய அரசியலமைப்பை உருவாக்கினாலேயே பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வும் வளர்ச்சிகளும் இலங்கைத் தீவில் அனைத்து மக்களுக்கும் நடைமுறைச்சாத்தியமாகி நாட்டின் வங்குரோத்து நிலையும் மக்களின் வறுமையும் அறியாமையும் நீங்கும்.

• • •

### 2024ஆம் ... தொடர்ச்சி ...

கல்வி பாதிக் கப்பட்டுள்ளது' என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

'தற்போதைய சூழ்நிலையில் சிறுவர்களுக்கு உளநலப் பாதிப்பு ஏற்படும் அபாயம் அதிகரித்திருக்கிறது'

'இந்தச் சவாலானது பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது'

இதன்படி, பாதுகாப்பான கற்றல் அமைப்பிலும், ஸ்மார்ட் கற்றல் வசதிகளிலும் முதலீடு செய்வது மிகவும் முக்கியமானது என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

### அமெரிக்க ... தொடர்ச்சி ...

நிறுவனத்தின் தலைவர் மார்க் சுக்கபேர்க், அமேசனின் தலைவர் ஜெப் பெசோ மற்றும் கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை ஆகியோர் முன்வரிசையில் இருந்ததைத் தொடர்ந்து ஸ்பெயின் பிரதமரின் இந்த எச்சரிக்கை வெளியாகி உள்ளது.

நான் ஒன்றை இங்கு சுருக்கமாக கூறுகின்றேன். ஜனநாயகம் என்பது ஒரு ஈரோவுக்கான ஒரு வாக்கு அல்ல, ஒரு ருவிற்றுக்கான வாக்கும் அல்ல, அது தனி மனிதர்களின் வாக்கு. அமெரிக்க செல்வந்தர்களின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஐரோப்பா எழுந்து ஒரு அணியில் நிற்கவேண்டும். அது தனது ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு போராட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் செல்வந்தர்கள் தற்போதைய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பின் தேர்தலுக்கு அதிக நிதி உதவிகளை வழங்கியதுடன், அமெரிக்க அதிபரின் நெருங்கிய நண்பர்களாகவும் இணைந்துள்ளது இங்கு குறிப் பிடத்தக்கது.

### கிழக்கின் விவ ... தொடர்ச்சி ...

அவரை, மற்றும் மரக்கறி பயிர் செய்கைகளிலும் பல இடர்களை எதிர் கொண்டே கிழக்கு விவசாயச் செய்கை தொடர்வதை காணலாம்.

தற்போதய அநுர அரசும் நெல்லுக்கான உத்தரவாத விலையை தீர்மானிக்க முடியாமல் திண்டாடும் ஒரு நிலையில் தற்போது உத்தரவாத விலையை நிர்ணயிக்கும் பொறுப்பை ஜனாதிபதி ஐந்து நிறுவனங்களிடம் விட்டுள்ளார். அரிசியை மட்டுமல்ல வெங்காயம், உப்பு, முட்டைகளை கூட இறக்குமதி செய்யும் நிலையே இலங்கையின் விவசாயம் தங்கியுள்ளது என்ற வேதனையான நாடாக இலங்கை உள்ளது.

### படுகொலை... தொடர்ச்சி ...

கொலைகளையும், கொடுமைகளையும், அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் உள்ளடக்கியதாகவே கடந்து போயிருக்கிறது. அவ்வாறானவைகள் இனிவரும் காலங்களிலேனும் இல்லாதிருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஊடகப் பணியை, நேர்மையாக முன்னெடுப்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாதநிலையிலேயேகடந்தயுத்தகாலங்களில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் பலர் தமது உயிரைக்காத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குமப்பால் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன், காணாமலாக்கப்பட்டும், பலர் உயிரைப் பாதுகாப்பதற்காக ஊடகப் பணியை விட்டொதுங்கியதுடன் பலர் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து தப்பியோடி தஞ்சமடைந்திருக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்தும் குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்" என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடற்றொழிலாளர் ... தொடர்ச்சி ...

பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பானபல்வேறுபிரச்சினைகள்தொடர்பில் இதன்போது பேசப்பட்டது. இந் நிலையிலேயே வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள்தொடர்பில் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி குழுவொன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது'' - என்றார்.

## கஷ்டப்பிரதேச ... தொடர்ச்சி ...

முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகு மென்றுசுட்டிக்காட்டுகின்றார். முக்கியதிர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் பெண்கள் குறித்த தீர்மானங்களை ஆண்களே மேற்கொள்ளு கின்றனர். இது பெண்களின் உரிமைகளை மீறு கின்ற ஒரு செயலாகும் என்பதோடு பெண்கள் தொடர்பான தீர்மானங்களை பெண்களே மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அத்தோடு தலைமைத்துவங்களை பொருத்தமான இடங்களில் பெண்களுக்கு வழங்குவதன் ஊடாக சிறப்பான எதிர்காலத்திற்கு வழிசமைக்க முடியும் என்பதும் சோபனாவின் கருத்தாகவுள்ளது.

இது இவ்வாறிருக்க பெண்களுக்கு எதி ரான அத்துமீறல்கள் தொடர்பில் அரசாங்கத் திடம் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. சமூக வலைத் தளங்கள் உள்ள டங்கலாக நிகழ்நிலைத்தளங்களில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. இலங்கை தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறை களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவினால் காலாந்தர மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி இலங்கையில் பெண்களுக்கு எதிராக வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கடந்த 06 ம் திகதி காலாந்தர மீளாய்வை முன்னெடுத்துவரும் ஐக்கிய நாடுகள் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை பெண்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பான பிரகடனத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அப்பிரகடனத்தின்படி நிகழ்நிலை முறைமையிலான மீறல்கள் உள்ளடங்களாக சகலவிதமான வன்முறைகளில் இருந்தும் பெண்களை பாதுகாப்பதுடன் சமத்துவம் மற்றும் அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டு வரல் ஆகிய கோட்பாடுகளை நிலைநிறுத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்குள்ளது.

பெண்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக பிரகடனத்தின் கோட்பாடுகள் மற்றும் இலக்குகளில் அநேகமானவை இலங்கையின் உள்நாட்டு சட்டமான 2024 ம் ஆண்டு 37 ம் இலக்க பெண்களை வலுவூட்டல் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. பெண்களுக் கான சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதிப் படுத்துவதும் பெண்களுக்கு அவசியமான கட்ட மைப்பு சார் ஆதரவை வழங்குவதுமே இதன் பிரதான நோக்கமாகும். அத்தோடு சிவில் சமூக அமைப்புகள், டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் என்பன தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் பெண்களை வலுவூட்டல் மற்றும் சட்டத்தை செயல்திறன் மிக்கவகையில் நடைமுறைபடுத்து வதற்கும், பெண்கள் ஆணைக்குழுவை ஸ்தாபிப் பதற்கும் அவசியமான போதிய நிதியை இலங்கை அரசாங்கம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

### அரசியல் ஒடுக்குமுறைகள்

மேலும் பெருந்தோட்டத்துறையில் பணியாற் றும் மலையகத் தமிழ் பெண்கள் இன, மொழி மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து வரு வதாக சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, தனியார் கம்பனிகளின் முறை யற்ற நடவடிக்கைகளால் அவர்களின் சீரான வேலைச் சூழல், சுகாதாரம், பாதுகாப்பான வீடு என்பவற்றுக்கான உரிமைகள் மீறப்படு வதாகவும் விசனம் வெளியிட்டுள்ளது. அத் தோடு இலங்கையில் நடைமுறையிலுள்ள சில சட்டங்களில் பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை ஊக்குவிக்கக்கூடியவாறான சரத்துக் கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 1951ம் ஆண்டு 13 ம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், 1952 ம் ஆண்டு 44 ம் இலக்க கண்டிய விவாக, விவாகரத்துச் சட்டம், 1911 ம் ஆண்டு 10 ம் இலக்க திருமண உரிமைகள் மற்றும் மரபுரிமை ஆணைச்சட்டக்கோவை என்பன அத்தகைய ஒடுக்குமுறை சரத்துக்களை கொண்டிருக்கின்றன. இச்சரத்துக்கள் முற்றாக நீக்கப்படவோ அல்லது பெண்களுக்கு எதிரான சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கான பிரகடனத்துக்கு அமைவாக திருத்தியமைக்கப்படவோ வேண்டும் என்றும் முன்வைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை மலையகப் பெண்களின் கட்டமைப்பு கடந்த காலத்தைக் காட்டிலும் தற்போது மாற்றம் பெற்றுள்ளதையும் இங்கு கூறியதால் வேண்டும். பல பெண்கள் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் சித்தி பெற்றுள்ளனர். இது வரவேற்கத்தக்க நிலையில் இந்நிலைமையானது வெளியில் தொழில் நாடிச் செல்லும் நிலைமையினை ஊக்குவிப்பதாகவுள்ளது. மறுபுறத்தில் இத் தகைய நிலைமைகள் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி வருகின்றன. எவ்வாறெனினும் பெருந்தோட்ட தமிழ்ப் பெண்கள் சமகாலத்தில் பல்வேறு அரசியல் ஒடுக்குமுறைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். இது தொடர்பில் சிவில் அமைப்புக்க ளின் அழுத்தமும் சாதக விளைவுகளுக்கு வித்திடுவதாக அமையும்.

• • •

## ட்ரம்பின் மீள் ... தொடர்ச்சி ...

ரஸ்யா மற்றும் சீனா நோக்கியே அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் தள்ளலாம்.

2017 ஆம் ஆண்டு ட்ரம் பதவியேற்றபோது இருந்த நிலையில் உலகம் தற்போது இல்லை. மேற்குலகத்தின் ஆளுமை பலவீனமாகிவிட்டது. பல்முனைவாக்கம் கொண்ட உலக ஒழுங்கு நிதர் சனமாகி வருகின்றது. எனவே தான் உலகத்தை புதிய ஏகாதிபத்தித்தின் அடிப்படையில் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புக்களை மேற்குலகமே மதிக்காத சூழல் ஒன்று கடந்த ஆண்டில் இருந்து உருவாக்கி வருகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ள அமெரிக்கா இஸ் ரேலிய பிரதமர் மீது பிடியாணை பிறப்பித்த அனைத்துலக குற்றவியல் நீதி மன்றம் மீதும் தடைகளை கொண்டுவரலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது. ட்ரம்பிற்கு பின்னால் உள்ள வியாபாரிகள், முதலாளிகள், ஆயுத உற்பத்தி யாளர்கள் தமது வியாபாரத்தையே முன்னிலைப் படுத்துவார்கள் என்பதால் உலகில் உள்ள ஏனைய நாடுகளின் வர்த்தகத்தை அல்லது வர்த் தக முக்கியத்துவம் கொண்ட நிலங்களைக் கைப்பற்றுவது மற்றும் நாடுகளுக்கு இடையில் போர்களைத் தூண்டி ஆயுத வினியோகத்தை மேற்கொள்வது என்ற நடைமுறைகள் தொடர லாம்.

ரஸ்யா மீது ஒரு அழுத்தத்தை பிரயோகித்த வாறு சீனாவை கையாள்வது தான் ட்ரம்பின் முதன்மையான விடையமாக நோக்கப்படுகின்றது. அதனை தான் றூபியோவும் கூறியிருக்கின்றார். ஐரோப்பா மற்றும் சீனாவை விட ஆசிய பிராந்தியம் மீது தான் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தவேண்டும் என ட்ரம்பின் வெளிவிவகாரக் குழுவின் ஆலோசகர் எல்பிறிட்ச் கொல்பி தெரிவித்துள்ளார். அமெரிக்காவை பின் தள்ளி பொருளாதார மற்றும் தொழில்நுட்பத்தில் சீனா முன்வருவதை அனுமதிப்பதற்கு அமெரிக்கா தயாராக இல்லை என்பது தான் அதன் பொருள்.



அதேசமயம் உலகில் தனது அதிகாரத்தை இழந்து வரும் அமெரிக்கா பல நாடுகளில் போரை தூண்டும் சாத்தியங்கள் உள்ளதாகவும், எனவே 2025 ஆம் ஆண்டு ஒரு அமைதியற்ற ஆண்டாகவே இருக்கும் என ரஸ்யாவின் வெளியக புலனாய்வுத்துறையான எஸ்.ஆர்.வியின் தலைவர் சேர்ஜி நறிஸ்கின் தெரிவித்துள்ளார். அவரின் கூற்றை உறுதிப்படுத்துவது போலவே ட்ரம்பின் பதவியேற்பு இடம்பெறுவதற்கு முதல் வாரம் ஈரான் அதிபர் ரஸ்யாவுக்கு சென்று இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டில் கையெழுத் திட்டுள்ளார்.

சீன அதிபரும் ரஸ்ய அதிபருடன் தொலை பேசியில் பேசியதுடன், இரு தரப்பு ஒத்து ழைப்புக்கள், வர்த்தகம் தொடர்பாகவும் பேசப் பட்டுள்ளது. அது மட்டுமல்லாது எகிப்தின் தலைவரை தொடர்புகொண்ட ரஸ்ய அதிபர் எகித்துடனான வர்த்தகம் மற்றும் அணுசக்தி மின்னுலை தொடர்பிலும் பேசியுள்ளார்.

ரஸ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் ட்ரம்பை எதிர்கொள்ளும் விதமாக தமது வியூகங்களை வகுத்துவரும் அதே சமயம் இந்தியாவும் அதன் பாதிப்புக்களை ஏற்றுக்கொள்ள தயாராக வேண்டும் என்ற கருத்துக்கள் எழுந்துள்ளன. சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுவேன் என ட்ரம் தெரிவித்துள்ள கருத்து தொழில்நுட்ப துறையில் அமெரிக்கா சென்றுள்ள இந்தியர்களை பாதிக்கலாம் என்ற அச்சங்கள் எழுந்துள்ளன.

எச்-1பி என்ற நுளைவு அனுமதியில் அமெரிக்கா மாற்றங்களை கொண்டுவருமாக இருந்தால் அது இந்தியாவின் 775 பில்லி யன் டொலர் ஏற்றுமதித்துறையில் பாதிப்புக் களை ஏற்படுத்தும். இந்தியாவின் தொழில்நுட்பத் துறையின் வருமானம் 250 பில்லியன் டொலர்கள். மேலும் தொழில்நுட்பத்துறையை சார்ந்து நேரிடையாக 5.4 மில்லியன் பணியாளர்களும், நேரிடையற்ற முறையில் 20 மில்லியன் பணி யார்களும் பாணியாற்றி வருகின்றனர். அவர்களின் தொழிலும் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற அச்சங்கள் எழுந்துள்ளன.

அதாவது ஆசியாவில் ஒரு மாற்றத்தை அமெரிக்கா ஏற்படுத்த முனைந்தால் அது சீனா, இந்தியா என்ற இரண்டு நாடுகளுக்கும் பாதிப் பானது என்பதுடன் போரை விட மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிகளைத்தான் உலக நாடுகள் எதிர்கொள்ள வேண்டிய நிலையை ட்ரம்பின் இரண்டாவது வரவு ஏற்படுத்துப்போகின்றது என்பது மெல்ல மெல்ல தெளிவாகின்றது.

• • •

இலங்கையின் ... தொடர்ச்சி ...

விளக்கம். ஆனால், இதன்படி உலகளாவிய அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு மாறும் போது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையும் இல்லாது போய்விடும் என்கின்ற ஒரு முடிவுக்கு வர நேர்கிறது. உண்மை அப்படி அல்ல. "ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது". முதலாளித்துவக் கட்டமைப்பை மாற்றுவதற்கு இடையில் அந்தக் கட்டமைப்பின் விளைவான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை நடந்தேறி இன அழிப்புகள் ஆங்காங்கே பூர்த்தியாகிவிடும்.

ஏகாதிபத்தியத்தை விடவும் ஆபத்தானது இன அழிப்பு என்கின்ற வகையில் முதலில் இன அழிப்பைத் தடுப்பதற்கான பாதுகாப்பு முதன்மையானது. ஒரு பிரச்சினை எதார்த்தத்தில் எந்த வடிவில் காணப்படுகிறதோ அந்த வடிவில் அது முதலில் தீர்க்கப்பட்டாக வேண்டும். இது சார்ந்த குழப்பம் அதிகம் மார்க்சிச அல்லது கம்யூனிசவாதிகளிடம் ஏற்படுகிறது. ஆனால், இதற்கான சரியான நடைமுறையைப் பொதுவுடைமை அரசை நிறுவியவரான லெனினின் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் காணலாம். பொதுவுடைமைப் புரட்சிக்கு அடிப்படை யான அம்சங்களில் ஒன்றாகத் தேசிய இனங்க ளின் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையை வரையறுத்து அதனை லெனின் முதன்மைப் படுத்தினார் என்ற நடைமுறை உண்மையை மேற்படி இடதுசாரிகள் பலரும் கண்டுகொள்ளத் தவறுகின்றனர்.

'தத்துவப் பிரச்சினை எதார்த்ததில் நிஜ மான வாழ்நிலையிலிருந்து எழுகிறது' என் கின்ற அறிஞர் மார்க்ஸின் கோட்பாட்டையும் மார்க்சிசவாதிகள் கவனிக்கத் தவறுகின்றனர். மனித வாழ்வுக்கு "உணவு, உடை, உறைவிடம்" என்பன அடிப்படையானவையே ஆனாலும், பிராணிகள் ஆயினும் சரி, மனிதர்களாயினும் சரி உயிர் வாழ்வுக்கு முதன்மையானது பாதுகாப்பு. எனவே பாதுகாப்பு இன்றி வேறு எதுவும் இருந்து பயனில்லை. ஆதலால், அடிப்படையிலும் அடிப்படையானது பாதுகாப்பு. உலகில் உள்ள அனைத்து நாடுகளும் முதலில் முன்னுரிமை கொடுப்பது தேசிய பாதுகாப்புக்காகும். இதனை மேலும் அழுத்தமாக தேசிய பாதுகாப்பும் பந்தோபஸ்தும் *(National defence and security)* என்ற பதமும் நடைமுறையும் விளக்கி நிற்கின்றது.

பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும், இனப்படுகொலை தீர்ந்துவிடும் என்ற வெறும் பொருளாதார வாதமானது இனப்படுகொலையை இன்னொரு வழியில் முன்னெடுப்பதற்கான மார்க்கமே ஆகும். இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை; பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் இனப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்று மஹிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவும் கூறிய ஆபத்தான பொருளாதார இனப்படுகொலை வாதத்தை உரிய வகையில் கண்டுகொள்ளத் தவற முடியாது.

*2024* ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அதன் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசநாயக்க போன்றோரும் இத்தகைய கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படு கொலை வாதத்தையே முன்நிறுத்தினர். இவர்கள் கூறும் பொருளாதார இனப்படுகொலை வாதத்துக் குள் தமிழ்த் தேசிய இனம் தன் தனித்துவத்தை இழந்து சிங்கள பௌத்த மயமாக்கத்திற்குள் கரைந்து அழிந்து போய்விடும்.

மனிதன் வெறுமனே ஒரு பொருளாதாரப் பிராணி அல்ல. பொருளாதாரத்துடன் கூடவே மொழி, பண்பாடு, கலை, தனித்துவம், வாழ்க்கை முறை ஆகிய அனைத்து அம்சங்களினாலும் கூட்டாய் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு தெளிவான சமூக வாழ்வைக் கொண்டவன். மனிதன் வெறுமனே ஓர் உணவுண்ணிப் பிராணி யல்ல. சராசரி மனிதர்களின் கண்களில் வெறும் உணவுண்ணிகளாகத் தோன்றும் பிராணி களிடத்திற் கூட தெளிவான பண்பாட்டு வேறு பாடுகளும், வாழ்க்கை முறை வேறுபாடுகளும், தனித்துவங்களும் உண்டு என்பதைக் கண்டு கொள்வதற்கான மனத்தை மனிதன் விரிவாக்க வேண்டும். இன்று வளர்ந்து வரும் அறிவியல் துறையான பிராணிகள் நடத்தையியல் விஞ்ஞானம் *(Animal behavioral science)* பிராணிகளின் பண்பாட்டியல் பழக்கங்களைக் கூர்ந்து அவதானிக் கின்றது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை விவகாரத்தில் பொருளாதாரம் ஒரு அம்சமாக இருக்கின்றதே ஆயினும், அதனைக் குறித்த புவியியல், அரசியல், வரலாற்று வளர்ச்சிப் போக்கு என்பவற்றுக்கு ஊடாக நடைமுறை சார்ந்து இரத்தமும் தசையுமான வாழ்வியலுக்கூடாக அதைப் பார்வையிட வேண்டும்.

நல்லதோ, கெட்டதோ எந்தொரு செயலும் அல்லது நகர்வும் அவை தொடங்கிய இடத்தில் இருந்து அவை அவற்றுக்குரிய தர்க்கபூர்வப் பாதையில் பயணிக்கும். சமைப்பதற்கு விறகைக் கொளுத்தினால் அதில் வெப்பம் நேரடி விளைவாக *(Direct effect)* வரும்போது புகை பக்கவிளைவாக *(Side effect)* வருகிறது. இதில் பக்கவிளைவான புகையை எதிர்கொள்ளத் தவற முடியாது. புகையைப் புகையாக அணுகியாக வேண்டும். சமூகம், அரசியல், வாழ்வியல் அனைத்திற்கும் இது பொருந்தும். எனவே இனப் பிரச்சினையை அல்லது இனப்படுகொலையை பொருளாதாரப் பிரச்சினையின் வெளிப்பாடு என்று கூறிவிட்டு அதனை அதற்குரிய பரிமாணத்தில் அணுகத் தவற முடியாது.

எப்போதும் அடிப்படையையும் அத னோடு இணைந்த வெளிப்பாட்டையும் இணைத் துப் பார்க்க வேண்டும். இதில் வெளிப் பாட்டைப் புறந்தள்ள முடியாது. அதாவது, நெருப்பில் இருந்து தோன்றும் புகை எப்படி பொய் இல்லையோ அப்படியே வெளிப்பாடுகளுக்கும் அவையவற்றுக்குரிய உண்மைகள் அல்லது தாக்கங்கள் உண்டு. தத்துவம் நடைமுறைக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர அது நடைமுறையில் இருந்து பிரிந்து கற்பனையில் இருக்க முடியாது.

ஆதலாற்தான் "எந்த ஒரு நடத்தையின் வெளிப்பாடும் அதற்குள் உள்ளடங்கி இருக்கும் தத்துவத்தை எமக்கு ஓரளவு சொல்லி நிற்கும் (*"For the outcome, the outcome tells us something about the ideas."*) என்ற தத்துவார்த்தக் கூற்றும் இவ்விடத்தில் கவனத்திற்குரியது.

அனைத்தையும் தழுவிய முழுமைப் படுத்தப்பட்ட அணுகுமுறை *(Holistic approach)* என்ற அறிவியல் பார்வையில் நின்று கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை வேரில் இருந்து மரமென விரிந்து விழுதுவரை அதன் சூழலையும் உள்ளடக்கி உரு வரை தீட்ட வேண்டும். அதனை அதனதன் குறித்த சூழலில் வைத்து உரிய வகையில் அதற்கே உரிய தனித்துவமான வடிவில் எடை போட வேண்டும்.

ஆதலால், கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலைகளை வெறும் பொத்தாம் போக்காகப் பார்க்காது அவை அவற்றுக்குரிய தனித்துவமான பின்னணிகளில் வைத்து புவியியல் – அரசியல் - பொருளாதார - சமூகவியல் வரலாற்று வளர்ச்சிப் போக்கு என்பனவற்றிற்கு ஊடாக அவை அவற்றுக் குரிய வகையில் எடை போடப்பட வேண்டியது முக்கியம்.

எந்த ஒரு தத்துவமும் நடைமுறையால் மெய்ப்பிக்கப்படாது விட்டால் அது வறண்ட வாதமே; எந்த ஒரு இலட்சியமும் நடைமுறைக்குப் பொருந்தாவிட்டால் அது கற்பனாவாதமே. கற்பனாவாதமும் வறண்டவாதமும் எதிரியின் கையில் கொடுக்கப்படும் கூரிய வாள்களாகும்.

**பாகம் *1* முற்றும்**

செயற்கை நுண் ... தொடர்ச்சி ...

முடியும் என அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

புதிதாக பதவியேற்றுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் செயற்கை நுண்ணறிவு அபிவிருத்தி திட்டத்திற்கு *500* பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாக தெரிவித்துள்ள நிலையில் எலிசனின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவு என்பது வளர்ந்துவரும் சீனாவின் செயற்கை தொழில் நுட்ப அறிவுடன் போட்டி போடுவதற்கான முன்னறிவிப்பாகும். இதன் மூலம் அமெரிக்காவில் *100,000* வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

இந்த பணிக்கான தகவல் திரட்டும் மையம் ஒன்று அமெரிக்காவின் ரெக்சஸ் மாநிலத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த பணிகளில் அமெரிக்காவின் *OpenAI* என்ற நிறுவனம் *Retro Biosciences* என்ற மற்றுமொரு நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற முன்வந்துள்ளது. இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் மனிதர்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்


அறநெறி பாடசாலை மாணவர்கள்


புதிர் வெட்டுதல்


குச்சவெளி கைநாட்டான் குளக்கட்டினை பாதுகாக்கும் வேலைகள்


வெள்ளத்தில் மூழ்கிய திருகோணமலை பாலம்பட்டாறு பத்தினீ அம்மன் ஆலயம்